நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை

நு வ ரெ லி யா

# குறிஞ்சிப் பேரிகை

பேரவையின் முதலாவது ஆண்டு விழா

சிறப்பு மலர்

**1991**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின்

முதலாவது ஆண்டு விழா

இனிதே சிறப்புற எம் நல்வாழ்த்துக்கள்

★

# கந்தபளை ஏஜென்சி

இல. 2 பிரதான வீதி,

கந்தபளை.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமிகு காடுகள் வாவென அழைக்கும்
எனக்கோ கடமைகள் ஆயிரம் இருக்கும்
துயில் கொளு முன்பு முடித்திட வேண்டும்
தொலையோ பல கல் நடந்திட வேண்டும்

The woods are lovely dark and deep
But I have promises to keep
Miles to go before I sleep and
Miles to go before I sleep

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
பூத பரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீத வள வயல் புகலித் திருஞான சம்பந்தர்
பாத மலர் தலைகொண்டு திருத்தொண்டு பரவுவோம்.

## சமர்ப்பணம்

(ஆசிரியப்பா)



இந்து மாகடல் ஈன்ற நன் முத்தாம்
ஈழத்தொளிரும் இரத்தினம் மிகுந்த
வானுயர்சிகர வரை நிரை மலிந்து
தானுயர் மேதுறு தால காலையில்
நுனி திகழ் நுவரெலி யாவெனும் வளர்நகர்
தனிலுறை இந்து சமயநன் மக்கள்
ஆற்றிய தொண்டினால் அமைந்து விளங்கும்
ஏற்றம் மிகுந்த இந்து கலாசாரப்
பேரவை மேலும் பொலிந்து சிறக்க
ஆர்வத்தோடு அருந்தமிழ் மொழியும்
தேவாரப் பண் திருமுறை யோடு
நாவாரப் புகழ் நற்றிருப் பணிகள்
ஆரண முறைப்படி அமைவு பெற் றிலங்கக்
காரணமான கனவான் களுக்கு
ஆண்டுமலராய் அமைந்த இந்நூலை
ஈண்டு சமர்ப் பணம் ஆக்கினோம் நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இன்றைய உலகம் விஞ்ஞானத்திலும் தொழில் துறையிலும் எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறதோ அதே வேகத்தில் மனிதப் பண்பாடும் சீர்கெட்டு வருவதைக் காண்கிறோம். மனிதப்பண்பாடு செழுமைபெற சமயமும், கலாசாரமும் இன்றியமையாதன.

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை போன்ற அமைப்புக்கள் மேற்கொண்டு வரும் சமய கலாசார நடவடிக்கைகள் எமது சமுதாயத்தை நல்ல பண்பாடு மிக்க சமுதாயமாய் வளர்க்கும். நமது இளஞ் சந்ததியினரின் உள்ளங்களில் நல்ல எண்ணங்களை வளர்க்க எமது கலைகள் உதவும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு,

இப்பேரவையின் முயற்சிகள் நுவரெலியா பிரதேசத்தில் கலாசார நடவடிக்கைகலிலே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன்.

இப்பேரவையின் ஆண்டு விழா சிறப்பாக அமையவும் அவர்களின் சமுதாயப்பணி தொடரவும் என் நல் வாழ்த்துக்கள்.



**சௌமியமூர்த்தி தொண்டமான்**
கிராமிய கைத்தொழில்
உல்லாச பயணத்துறை அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சரின்

# வாழ்த்துரை

மலையகத்தில் சமீப காலமாக கலாசார மன்றங்கள் புத்துணர்ச்சி யுடன் செயல்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருந்தது. பதுளை, பண்டாரவளை, அட்டன், கண்டி ஆகிய மலையக நகரங்களில் இவ் விழிப்புணர்ச்சி தாராளமாகக் காணக் கூடியதாக இருந்தது. பெரும்பாண்மையான தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசமாக இருந்தபோதி லும் நுவரெலியாவிலே கலாசார நடவடிக் கைகள் ஏதும் நடைபெறாதிருந்ததை அவதானித்து என்னுடன் தொடர் புள்ள சிலரிடம் நுவரெலியா விலே ஒரு கலாசார மன் றத்தை நிறுவும் ஆலோசனையை அவர்களிடம் முன்வைத்தேன்.

அதற்கிசைய மிகத் துரிதமாக நுவரெலியா இந்து கலாசார பேரவை உருவாகி ஓராண்டும் பூர்த்தியாகின்றது. இப்பேரவை ஏற்படு செய்த பல நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. முதல் வருடத்திலேயே நல்ல தரமான சமய, கலாசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் கலாசாரப் பேரவை நுவரெலியாப் பிரதேசத்தில் தமது நடவடிக்கை களை விரிவுபடுத்த எமது அமைச்சு பூரண ஒத்துழைப்பு நல்கும். அத்துடன் நுவரெலியாப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள் பொதுப்பணி மன்றங்களை ஒன்றிணைக்கவும் அவற்றின் இடர்களைக் களைய வும் இப்பேரவை உதவி புரிய எமது அமைச்சு அவர்களுக்கு உதவும்.

இப்பேரவையின் தொண்டு மென்மேலும் வளரவும் ஆண்டு விழா சிறப்பாக அமையவும் எனது நல்வாழ்த்துக்கள்.

P. P. தேவராஜ்
பாராளுமன்ற உறுப்பினர்
இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரிடமிருந்து.........



தமிழ் மொழியும் இந்து சமயமும் இரண்டறப் பிணைந்துள்ளதை இன்று நேற்றல்ல, ஆண்டாண்டு காலமாக யாவரும் கண்ணுற்று வருவதொன்றாகும். ஒரு மொழியின் வளர்ச்சியும், சமய வளர்ச்சியும் அதனைச் சார்ந்துள்ள மக்கள் எவ்வகையிலே பங்களிப்பு செய்கின்றார்களோ அதனிலேதான் தங்கியுள்ளது.

அன்னைத் தமிழ் மொழிக்கும் ஆதியும் அந்தமும் இல்லா இந்து சமயத்திற்கும் எங்களால் இயன்றதைச் செய்து அதன் மூலம் இவற்றுள் புதைந்துள்ள அரியபல முத்துக்களை வெளிக்கொணர வேண்டும். இவை மக்களைச் சென்றடைய வேண்டும். மலையகத்திலே ஒரு சமய விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும் என்ற நோக்கிலே ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா இந்து கலாசாரப் பேரவை இவ் ஓராண்டு கால இடைவெளியில் சாதனைகள் படைத்து குறுநடை போடும் போது அதில் எண்ணற்ற மகிழ்ச்சியுடன் ஏறுநடை போடும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் திளைத்திருக்கும் நல்லவர்கள் பலர்.

இவ்வமைப்பு மலையகத்திலே சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதோடு பாடசாலைகள், பொதுப்பணி மன்றங்கள் ஆகியவற்றின் விழிப்புணர்வினைத் தட்டி எழுப்பி அவர்களை சமய வளர்ச்சியில் ஆக்கத்திறன்களை வெளியுலகத்திற்குக் கொண்டுவர இவ்வமைப்பு நிறைய செயல்பட்டுள்ளமையை கூறி நாங்கள் பெருமிதம் கொள்கின்றோம்.

எந்த ஒரு அமைப்பும் சிறப்புற இயங்க வேண்டுமெனின் அதனைச் சார்ந்துள்ளவர்களின் பங்களிப்பும், செயல் திறனும் திருப்தியாக இருக்கவேண்டும். அந்தந்தச் சிந்தனையிலே பேரவையின் வளர்ச்சிக்கு செயல்பாட்டுத்திறன் மிக்க நல்ல உள்ளங்கள் நிறைமனதோடு உழைக்கின்ற காரணத்தால் இவ் நற்பணி தொடர்ந்து எவ்வித தடையுமின்றி வீறுநடை போடும் என்ற நிச்சயமான அசைக்க முடியாத, ஆழமான நம்பிக்கையுடன் தலைவராக இருப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்

எங்கள் எண்ணங்கள் நிறையத்தான் என்றாலும் உங்களின் ஒத்துழைப்பின் மூலம் தான் அது பூரணமான நிறைவாகும். எனவே கலாசாரப் பேரவையின் வளர்ச்சிக்கு இந்துக்களாகிய ஒவ்வொருவரும் கட்டாயமாகப் பங்களிக்க வேண்டும் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். ''எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இறை வாக்கினிலே தான் எம் செயல் திறன் வீறுநடை போடுகின்றது.

**V. இராதாகிருஷ்ணன் (J.P)**
தலைவர்
நுவரெலியா இந்து கலாசார பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களைப் பற்றி

மலையகத்தே வாழ்கின்ற தமிழர்களது கலை, கலாசாரங்கள் பேணப்பட வேண்டும், அவை வளர்ச்சியுற வேண்டும், என்ற எண்ணங்கள், சமுதாய உணர்வுள்ள சகலருக்கும் உண்டு. ஆனால் எண்ணங்கள் செயலாக வேண்டும், என்ற தத்துவம் வார்த்தைகளோடு நின்று விடாமல் செயலாக உருவெடுக்கவேண்டும், என்ற நோக்கம் கொண்டவர்கள் சிலராக இருப்பது மலையகத்தின் துர் அதிர்ஸ்டமே என்றுதான் கூறவேண்டும்.

எண்ணங்கள் செயலாக வேண்டுமென்ற நோக்கம் கொண்ட சில நண்பர்கள் 1990ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் திகதி சூரிய அஸ்த்தமான வேளையில் மலையகத்தின் எழில் நகராம் நுவரெலியாவில் ஒரு கலாசார சூரியன் உதிக்கவேண்டுமென்ற நோக்கத்திற்காக நுவரெலியா ஆவேலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அம்பிகைமை வழிபட்டு எண்ணங்கள் எப்படி செயலாகலாம் என்ற ஆலோசனையில் ஈடுபட்டனர்.

1983ம் ஆண்டிற்குபின் கலை, கலாசார நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாதிருந்த நுவரெலியாவில் புதியதோர் முயற்சி என்ற எண்ணம் வந்ததும் திட்டங்கள், ஆலோசனைகள், அமைப்பு முறைகள் யாவும் வான் மழைபோல் பொழியத் தொடங்கியது. அடுத்தடுத்து ஆலோசனைக்கூட்டங்கள் கருத்துப் பரிமாறல்கள் யாவும் மிகத்துரித கெதியில் ஆனால் மிகக் கவனமாக பரிசீலிக்கப்பட்டு யாப்பு அமைக்கப்பட்டு, பெயர் சூட்டப்பட்டு மங்களகரமாக 4-4-90 அன்று பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு ''நுவரெலியா இந்துக் கலாசாரப் பேரவை'' என்ற சூரியன் உதயமாகியது.

'' சங்கங்களால் — நல்ல
சங்கங்களால் — மக்கள்
சாதித்தல் கூடும் பெருங்காரியம்
சிங்கங்கள் போல — இளம்
சிங்கங்கள் போல் — பலம்
சேர்ந்திடும் ஒற்றுமை சார்ந்திடலாலே''

என்கிறார் பாரதிதாசன்

பெரிதாக நாம் எதையும் சாதித்து விட்டோம் என்று கூறுவதற்கு இல்லாவிட்டாலும் ஏதாவது செய்துள்ளோம், என்றுகூற நாம் செய்தவற்றை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்

மணிவாசகப் பெருமான் தமிழிற்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு அளப்பறியது. எமது மாணவ மணிகளிடையே திருவாசக அறிவை மேம்படுத்தவும், ஆர்வத்தை ஊட்டவும், மாணிக்கவாசகர் குருபூசை 27-6-90 அன்று நடாத்தப்பட்டது. பாடசாலை மாணவ மாணவிகளிடையே திருவாசக மனனப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகியன நடாத்த பட்டன.

கௌரவ இந்துக் கலாசா அமைச்சர் P. P. தேவராஜ் அவர்களால் அறநெறிப் பாடசாலை, இசை நடன வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அறநெறி பாடசாலையிலும், பரத நாட்டிய வகுப்புகளிலும், இன்று நூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயில்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய அறிவையும், மொழியறிவையும் விருத்தி செய்யவும், மாணவ சமுதாயத்தின் பேச்சாற்றலை வளர்க்கவும் விவாதச் சுற்றுப்போட்டியொன்றினை ஆரம்பித்து முதலாம், இரண்டாம் இறுதி சுற்றுகளாக போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

பேரவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதிதிரட்டுவதற்காக நுவரெலியா R. V. M. ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் பிரபல தென்னிந்தியப் பாடகர் தீபன் சக்கரவர்த்தியின் இசை நிகழ்ச்சி 14-10-90 அன்று நடைபெற்றது.

''இந்து சமய வளர்ச்சியில் ஆலயங்கள் பொதுப்பணி மன்றங்களின் பங்களிப்பு'' என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கு பேரவையின் வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கிய மைல்க்கல்லாகும். 400க்கும் மேற்பட்ட பிரதி நிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் திரு. சன்முகலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் திரு. தொண்டமான் அவர்களின் பிறந்த தின விழா நுவரெலியாவிலே மிகச் கோலாகலமாக நடைபெற்றபோது பேரவையின் நடன வகுப்பு மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் சபையினர் பாராட்டைப் பெற்றன.

இந்திய உயர் ஸ்தானிகர் திரு. நாகேந்திரநாத் ஜா, நுவரெலியாவிற்கு வருகை தந்த போதும் பேரவையின் நடன வகுப்பு மாணவிகள் நடன நிகழ்ச்சிகளை வழங்கினர்.

பாரதத்திலிருந்து சமய சொற்பொழிவுகளை நடாத்த வந்த செல்வி பார்வதி கணேசனின் சொற்பொழிவுகளை நுவரெலியா மாவட்டத்தின் பல இடங்களில் பேரவை ஒழுங்கு செய்து நடாத்தியது.

பேராசிரியர் திரு. ராஜகோபாலன் அவர்களின் சொற்பொழிவுகளையும் நுவரெலியா மாவட்டத்தில் பேரவை ஒழுங்கு செய்து நடாத்தியது.

மகாசிவராத்திரி தின விழாவன்று பேரவையின் அற நெறிப்பாடசாலை மாணவ மாணவியரின் பஜனை நிகழ்ச்சியும் பிரார்த்தனை நிகழ்ச்சியும் நுவரெலியா ஆவெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்றன.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கல்யாண வைபவத்தில் பேரவையின் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் இயற்றிய ஊஞ்சல் பாடல்கலை ஆசிரியைகளும், மாணவிகளும் பாடினர்.

சாகித்திய விழாவிற்கான முன்னோடி நிகழ்ச்சியாக மலையகக் கலைஞர் ஒன்று கூடல் நிகழ்ச்சி 17-03-91 அன்று நுவரெலியா பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. இந்து கலாசார அமைச்சர் திரு. P. P. தேவராஜ் அவர்கள் கலந்துகொண்ட இந் நிகழ்ச்சியில் எழுத்தாளர் திரு. சாரல் நாடானுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. 20க்கு மேற்பட்ட கவிஞர்களும் எழுத்தாளர்களும் இந் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வரண்ட நிலத்தைப் பண்படுத்தி சில கலாசார விதைகளை நாம் விதைத்து அவை சிறுபயிர்களாக இப்போது துளிர் விட்டுள்ளன. அவை அழகிய மரங்களாக வளர்ந்து பூத்துக் காய்த்து இப்பிரதேச மக்களுக்கு பயன்பட என்றும் எமக்கு நுவரெலியா மாவட்ட தமிழ் நெஞ்சங்களின் அன்பும் ஆதரவும் தேவை. அப்போது எமது சேவை மென்மேலும் ஆரோக்கியமான கலாசார நிகழ்ச்சிப் பூக்களை உங்கள் முன் சமர்ப்பிக்கும் என்று கூறி விடை பெறுகின்றேன்.

வே. சிவகுருநாதன்
பொதுச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரவையின்
முதலாண்டு
நிறைவை

பெருமையுடன் வாழ்த்தும்

# R. V. M. டிரேடர்ஸ் AND பேங்கர்ஸ்

இல. 37, கண்டி வீதி,
நுவரெலியா.

052-2062

" செய் அல்லது செய்யவிடு
வாழு அல்லது வாழவிடு "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' இங்கு எவரென்ன சொன்னாலும்
நிகரென்று பட்டதை
நிமிர்ந்து நின்று - எழுச்சியுடன் பாடு''

பேரவையின் இலட்சியப் பாதையில்

இது ஒரு மைல்கல்


வாழ்த்தும்

# அஜந்தா ஜுவெல்ஸ்

இல. 4, புதிய சந்தைக் கட்டிடம்

நுவரெலியா

☎ 052-2577


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேரவையின் முன்னோடிகள் - 1990 - 91

தலைவர் :

திரு. V. இராதாகிருஸ்ணன் J. P.

o

உப தலைவர் :

திரு. M. சிவபாலன்

o

பொதுச் செயலாளர் :

திரு. V. சிவகுருநாதன்

o

உதவிச் செயலாளர்கள் ;

S. கனகசபேசன்

செல்வி. S. திலகராணி

o

பொருளாளர் :

திரு. V. ஆதிமூலம்

o

உப பொருளாளர் :

திரு. P. மகேஸ்வரன்

o

செயல் அவை :



திரு. S. வேல்ராஜா
திரு. N. சிவகுமாரன்
திரு. K. தனபாலசிங்கம்
செல்வி. I. குகநந்தினி
திரு. M. சக்திவேல்
திரு. P. சந்திரமோகன்
திரு. S. வேலாயுதம்
திரு. N. சுகுமாரன்
திருமதி. K. பத்மநாதன்
திரு. S. சந்திரபோஸ்

'' தொண்டாக நினைத்துத்தான் தோள்தட்டி நிற்கின்றோம் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவையின் சேவை மென் மேலும் வளர

வா ழ் த் து ம்

# நுவரெலியா பொட்டட்டோ சென்டர்

இல. 3, லொரி நிறுத்துமிடம்,

நு வ ரெ லி யா.

முதலாம் ஆண்டு விழாவில் உளம் நெகில
வா ழ் த் து ம்

# றோயல் ட்ரேடர்ஸ்

கிழங்கு வியாபாரிகள்

இல. 2C, சென் அன்றூஸ் வீதி,

நு வ ரெ லி யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்

## தேவாரம்

நிரைகழல் அரவம் சிலம் பொலி அலம்பும் நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த வடிவினர் கொடியணி விடைய
கரைகெழு சந்துங் காரகிற்பிளவும் அளப்பருங் கனமணிவரன்றி
குரை கடலோதம் நித்திலங் கொளிக்கும் கோணமாமலை யமர்ந்தாரே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்த வெம்பரனே பற்று நான்மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோவேன் ஆர்க்கெடுத்துரைப்பேன் ஆண்ட நீ யருளிலை யானால்
வார் கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய் வருகவென்றருள் புரிவாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே சித்தத்துள் சித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே அம்பலமாடரங்காக்
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாவைத் தொண்டனேன் விளம்புமாவிளம்பே

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிகீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதோர் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமணவாழனுக்காட்செல்
பாரும் விசும்பும் அறிவும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுலுகத்தினிற் பிறவிமாசற
எண்ணிய பொருளெலாம் எழிதின் முற்றுறக்
கண்ணாத லுடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரிபோர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்ததோளும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்தபாசக் கயிறோடு தூதுவர் நலியாதே
அசந்தபோதென் துயர்கெட மாமயில் வரவேனும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கலாசார முயற்ச்சிக்கு வித்திட்ட

முதலாண்டு வாழ்க

நீதியும் சுதந்திரமும் நெருங்கியிருக்க வேண்டும்
இரண்டுக்கும் இடையே பிரிவினை ஏற்பட்டால்
ஒன்றும் வாழாது.

- எட்மண்ட்பாக்


# சமனல் டிரேட்ஸ்

இல. 99, 4ம் குருக்குத் தெரு.

கொழும்பு - 11.

☎ 01-432561


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



செல்வி. பார்வதி கணேசனுடன் பேரவை உறுப்பினர்கள் சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. பார்வதி கணேசன் M. A.
பேரவை ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றுகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

மலையக சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள இந்து சமய அறிவு வளர்ச்சி, ஆலய வழி பாட்டு முறைகள், சமய அனுட்டானங்கள், ஆலயங்கள் பொதுப்பணி மன்றங்களின் பொருளாதார நிர்வாக பிரச்சினைகள் போன்ற விடயங்களில் மந்த நிலையை மேம் படுத்துமுகமாக எங்களது பேரவை ஒரு ஆய்வுக்கருத்தரங்கினை மாவட்ட ரீதியில் இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் 1990ம் ஆண்டு நடாத்தியதன் பேரில் நம்முன் தோன்றியுள்ள இந்து சமய கலாசார சம்பந்தமான எதிர்கால வழிமுறைகளும் செயற் திட்டங்களும் செயல் வடிவம் பெற நாம் திடசங்கற்பம் கொள்வோம்.

மேற்படி ஆய்வுக் கருத்தரங்கிற்கு ''இந்து சமய வளர்ச்சியில் ஆலயங்களினதும் பொதுப்பணி மன்றங்களினதும் பங்களிப்பு'' என்ற தலைப்பை வருகை தந்திருந்த நூற் றுக்கணக்கான பேராளர்களின் முன்வைத்ததின் பேரில் சில விடயங்களை நாம் இனம் பிரித்து எதிர்கால நடவடிக்கைகளுக்கான ஓர் செயற்திட்டத்தினை வகுக்க முடிந்தது.

அவையாவன:- (1) இந்துமத வளர்ச்சிக்கான பிரச்சார முறைகளும் அதற்கான செயற் திட்டங்களும்.

(2) இந்து சமய அறிவு வளர்ச்சிக்கான திட்டங்கள்.

(3) வழிபாட்டு முறைகளில் உள்ள பிரச்சினைகள்.

(4) பொருளாதாரப் பிரச்சினைகள், தீர்வுகாணும் வழிமுறைகள்.

(5) நிர்வாக பிரச்சினைகள், தீர்வுகாணும் வழிமுறைகள்.

(6) எமது பாரம்பரியமும் சமய அனுட்டானங்களும்.

இவற்றில் நாம் முதலாவது விடயத்தை எடுத்துக்கொண்டால் எமது மலையக சமுதா யத்தில் இந்து மதத்தைப் பற்றிய தப்பான கருத்துக்களும் எண்ணங்களும் சமய தத்து வங்களின் விளக்கப்பாடின்மையும் எங்கள் சமய கலாசார மாற்றத்திற்கும் நம்பிக்கை யற்ற தன்மைக்கும் வழிகோலியுள்ளதை நாம் காணலாம். இவற்றிலிருந்து நம் சமுதா யத்தை ஒரு இந்து சமய நாட்டமுள்ள கலாசார பழக்க வழக்கமுள்ள நம்பிக்கை உணர் வுள்ள நிலைக்குக் கொண்டுவர பல கருத்துக்கள் வழங்கப்பட்டன.

அவை (1) ஒவ்வொரு பாடசாலையிலும் இந்து சமய அறிவுள்ள திறமையுள்ள ஆசிரி யர்களை நியமிப்பதன் மூலமும் அதற்காக அவர்களை ஒன்று சேர்த்து இது சம்பந்தமான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பேரவை மூலம் வழங்குவதனால் எமது சமய கலாசார தத்துவங்களின் விளக்கங்களை உரிய முறையில் மாணவர்களுக்கு தெளிவாக்க முடியும்

(2) இந்து மத விஷேட தினங்களில் ஒவ்வொரு ஆலயங்களிலும் பாடசாலைக ளிலும் இந்து சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்ச்சிகளையும் நடாத்துதல்.

(3) எமது இந்து சமய தத்துவங்களையும் விளக்கப்பாடுகளையும் துண்டுப்பிர சுரங்கள், கைநூல்கள், புத்தகங்கள் வாயிலாக வெளியிட்டு அவை ஒவ்வொரு இந்து மதத்தவனுக்குச் சென்றடையும் வண்ணம் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இரண்டாவது விடயத்தை எடுத்துக்கொண்டால் நம்மத்தியில் இன்று இந்து சமய அறிவு வளர்ச்சி குன்றிக் காணப்படுகிறது. இதனை மேம்படுத்துவதற்காக சில கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன.

அவை (1) ஆலயங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மற்றும் விஷேட தினங்களிலும் கூட்டுப்பிரார்த்தனைகள், சமயச் சொற்பொழிவுகள், அறிஞர்கள், ஆலய பூசகர்கள் மூலம் நடாத்துதல்.

(2) ஒவ்வொரு தோட்டங்களிலுமுள்ள ஆலயங்களில் அந்தந்த தோட்டங்களிலுள்ள படித்த இளைஞர்கள், யுவதிகளைத் தெரிந்தெடுத்து பயிற்றுவித்து அறநெறிப் பாடசாலைகளை நடாத்துதல்.

(3) பாடசாலை மட்டத்திலும் தோட்ட மட்டத்திலும் சமய அறிவுப் போட்டிகளையும், பண்ணிசைப் போட்டிகளையும் நடாத்தி இளம் தலைமுறையினரின் சமய அறிவு வளர்ச்சியில் பங்காற்றல்

அடுத்து மூன்றாவது விடயத்தை எடுத்துக்கொண்டால் எமது சமூகத்தில் இடத்துக்கிடம் ஆலய வழிபாட்டு முறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன அவற்றை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு ஆலய நிர்வாகங்கள் மூலமோ அல்லது தோட்ட, நகரவாரியாக பிரச்சாரக்குழுக்களையும், தொண்டர் அணிகளையும் பயன்படுத்துவதன் மூலமோ எமது மத கலாசார வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள தடைகளையும் மூட பழக்கவழக்கங்களையும் அகற்ற பாடுபடுதல்

அடுத்து பொருளாதார பிரச்சினைகள் என்ற விடயத்தை எடுத்துக்கொண்டால் எமது மத கலாசார வளர்ச்சிக்கும் ஆலயங்களின் செயற்பாட்டுக்கும் பொருளாதார வசதிகள் குறைவாக காணப்படுதலை நாம் கண்கூடாகக் காணலாம். இதற்காக ஒவ்வொரு தோட்ட, நகர வாரியாக இந்து மத அமைப்புக்களை ஏற்படுத்தி சிறு சிறு கைத்தொழில் பேட்டைகளை உருவாக்கி அதன் மூலம் நிதி வருவாயைப் பெறமுடியும் மேலும் நிதிப் பற்றாக்குறையைப் போக்க சிரமதானங்கள், அமைப்பு ரீதியாக சந்தாப்பண மூலம் நிதி பெறுதல் போன்ற கருத்துக்கள் செயற்திட்டங்களுக்காக முன்வைக்கப்பட்டன.

அடுத்து நிர்வாகப் பிரச்சினைகள் என்ற விடயத்தை எடுத்துக்கொண்டால் எமது மலையகத்தின் எந்த தோட்டமாயினும் நகரமாயினும் ஆலயங்களானாலும் பொதுப்பணி மன்றங்களானாலும் முறையான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி மாவட்ட ரீதியில் ஒன்று சேர்த்து பங்காற்றக்கூடிய இந்து மத கலாசார அமைப்பை உருவாக்குவதன்மூலம் எந்தப் பிரச்சினைகளையும் முறையாக சம்பந்தப்பட்டவர்களுடன் (இந்து கலாசார அமைச்சோ அல்லது வேறு, இந்து மத அமைப்புக்களோ) தொடர்பு கொண்டு தீர்த்துக்கொள்ளும் வழிமுறைகளை ஏற்படுத்துதல்

அடுத்து எமது பாரம்பரிய சமய அனுட்டானங்கள் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் எமது சமூகத்தின் பாரம்பரிய கலை கலாசார சமய அனுட்டானங்கள் நலிவடைந்து தற்கால நவ நாகரீக பழக்கவழக்கங்கள் மேலோங்கி வருவதை நாம் காணலாம். எனவே எமது பாரம்பரிய கலை கலாசார நிகழ்ச்சிகளையும் சின்னங்களையும் பழக்கவழக்கங்களையும் ஆலயங்களின் திருவிழாக்காலங்களிலும் விஷேட இந்து மத தினங்களிலும் மீண்டும் முன்கொண்டுவர ஆவன செய்தல்.

ஆகையினால் மேற்கண்ட பல கருத்துக்கள் எங்கள் பேரவையினால் நடாத்தப்பட்ட ஆய்வுக் கருத்தரங்கில் பேராளர்களால் முன்வைக்கப்பட்டு பேரவையின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் எதிர்காலத்தில் இத்தகைய திட்டங்கள் செயலுறுப்பெறுமேயானால் எமது மத கலாசார பாரம்பரியம் மேலோங்கும் என்பதில் ஐயமில்லை.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :-

# Lucksala Lanka Corporation

*Dealers in :- Sri Lanka State Trading (General) Corporation*

**No. 40 - B/I, Kandy Road,**

**NUWARA ELIYA,**

Phone : 2135 - 2435

இந்து கலாசாரப் பேரவையின் ஓர் ஆண்டு விழாவை

இன்பமுடன் வாழ்த்தும்

## ஜீ. செல்லையா

இல. 708, மணிங் மார்கட், கோட்டை

கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடும்

பேரவையின் சேவை மென்மேலும்

வளர்ந்திட வாழ்த்தும்

எந்த நாட்டில் மக்கள் தங்களுடைய உடலைத்தவிர மற்றெல்லாவற்றையும் பொது உடமையாக கருதி கொண்டு அதன்படி வாழ்க்கையை நடத்துகிறார்களோ, அங்கே வழக்குகள் விசாரணைகள் ஒன்றும் இரா.

சாக்கிரடீஸ்.

லக்சரி ட்ரேடிங் கொம்பனி

இல. 178, 4ம் குருக்குத் தெரு,

கொழும்பு - 11.

☎ 01-422971

கிளை.

செல்லா ட்ரேடர்ஸ்

இல. 49 A, 4ம் குருக்குத் தெரு,

கொழும்பு - 11.

☎ 434885


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்கள் பணி வளர.........

பேரன்புடையீர்,

கொஞ்சும் அழகு தமிழ் குலவும் நுவரெலியாவில் மிஞ்சும் கலாசாரம் மிக்க இந் நகரில் இந்து கலாசாரப் பேரவை தங்களது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இது எங்களுக்கு பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அளவு கோல்களாக அச் சமுதாயத்தின் மொழி, கலை, கலாசாரம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவை அமைகின்றன. ஆகவேதான் அவற்றை நெறிப்படுத்தி தம்மின மக்களை உயர்த்தி வைக்கும் நோக்கத்துடன் கலைகள் பல வளர்த்து, கன்னித் தமிழ் கதையும், பாட்டும், கூத்தும், கருத்தரங்கும், களிகூர் நடனங்களும் பிறவும் எழிலாய் பொங்கி ஏற்றம்பெற உழைத்திடும் நுரளை இந்து கலாசாரப் பேரவை மக்களின் இதயம் கவர்ந்து இன்று ஒரு வருட நிறைவை கொண்டாடுகின்றது. பல்கலை விழாக்களை நடாத்தி உளம் மகிழ்ந்த இந்து கலாசாரப் பேரவை "எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என மார்பு தட்டி நுரளை வாழ் மக்களின் கல்வி, கலை, கலாசாரத்தை அந்தந்த துறைகளின் ரீதியில் பின்தங்கியிருக்கும் நம்மவர்களைக் கட்டியெழுப்பும் பணியில் அவற்றை வளர்க்கப் பாடுபடுகின்றது. அத்தோடு நின்றுவிடாது இந்த நுரளை பெருநகரில் வாழும் தமிழர்கள் ஒருவரோடு ஒருவர் ஒட்டி வாழாத மனப்பான்மையை மாற்றித் தம், இன மொழி, பண்பாடுகளை மறந்த நிலையில் வாழும் மயக்க நிலையைப் போக்கிப் புதுயுகத்தை நோக்கி வாழத்தக்க முறையில் ஐக்கியத்தோடு சகோதரத்துவம் சகவாழ்வு மலர அந்த மலர்ச்சியைக் காணத் துடியாய்த் துடிக்கும் இந்துக் கலாசாரப் பேரவை பல தூயநோக்கங்களையும் செயல்படுத்தி வருகிறது என்பது யாவரும் அறிந்ததே. மேலும் எழுத்தளவில், சொல்லளவில் இருக்கும் இலட்சிய நோக்கங்களை ஆக்கவுருவில் தோற்றமளிக்கும் என்பதையும் அதற்கு இதுவரை தந்த ஆதரவை விட பன்மடங்கு ஆதரவை பேரவை நாடிநிற்கிறது. மலையகத்தில் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என முன்நிற்கும் பேரவை மக்கள் மத்தியில் பக்தி நெறியை வளர்த்து அவர்களின் வாழ்வை செம்மைப் படுத்தி சமயா சமயங்களில் அவர்களுக்குப் புகலிடம் தரும் இடமாக இந்தப் பேரவை செயலாற்றுகின்றது மனிதனின் வாழ்வை வளம்படுத்துவது கலாசாரம். மனிதனை வாழவைப்பது மதம் காட்டும்வழி. இவை இரண்டும் பேரவையின் இரு கண்கள். ஆகவே சைவத்தின் பெருமைகளையும் மலையகத்தில் சைவம் தழைத்தோங்கவும், மூவேந்தர் காலத்தில் சங்கம் வளர்த்த முத்தமிழை மூலைமுடுக்கெல்லாம் பரவச்செய்து சமுதாயம் புதுவேகம் படைக்க எங்களுடன் சேர்ந்து பணியாற்ற வாருங்கள் என்பது எங்களது அன்புக் கட்டளையாகும்.

எனவே மனிதனது உள்ளத்திலே நிரம்பிப் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றல்களை உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் கலை, கலாசாரத்தை பன்நெடுங் காலத்து நாகரிகம் பெற்ற தமிழர் வாழ்க்கையில் மரபுக்கலைகள் மூலம் கலாசாரம் நிரம்பி வழிந்து உலகுக்களித்த வரலாறும், காவியங்களும், இலக்கியங்களும் காட்டுகின்ற வழியிலே நுரளை கலாசாரப்பேரவை தொடருகின்ற பணி மலையகத்தை பண்புமிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூதாயமாக மாற்றுவது அவர்களின் வாழ்வை வளம்பெற வைப்பது அவ் வாழ்வை செப்பனிடும் மொழிக்கும், இசைக்கும் வலிவும், பொலிவும் பெற நாங்கள் எடுத்துள்ள பணி வாழ வளர சிறப்புடன் திகழ பெரியோர்களினதும், தமிழ் பற்றுள்ள உள்ளங்களினதும் அன்பும், ஆதரவும் தேவை என்பதை நினைவூட்டுகின்றோம்

யாமறிந்த கலாசாரப் பேரவைகளில் இன்பத் தமிழ் சொட்டும் இப் பேரவை நிலைத்து நின்று நற்பணிசெய்ய, நல்லதோர் சமூதாயம் வளர எமது பணி தளர்ச்சியடையாது, உயர்ச்சியடைய எமது கரங்களைப் பலப்படுத்தி கலை, கலாசாரம், பண்பாடு, கல்வி, அறம் செழித்தோங்க எம்முடன் இணையுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

'' எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே நீ முழங்கு''

வாழ்க தமிழ்மொழி வளர்க தமிழ்க் கலாசாரம்

இவ்வண்ணம்

நுவரெலியா இந்து கலாசார பேரவையின் செயற்குழு உறுப்பினரும்
புனித சவேரியார் கல்லூரியின் ஆசிரியருமான
திரு. என். சுகுமாரன்

கண்கள் பஞ்சடைத்துப் போகிறது. கால்கள் நடக்க மறுக்கின்றன.
ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது.

— தனிநாயகம் அடிகள்

புகழ் என்பது தனிச் சொத்து
அதன் அருமை
அதனை இழந்த பிறகுதான் தெரிகிறது.

— வின்ஸெலியட்

வாழ்க்கை, உலகில் உயிரோடு
வாழ்வதில் மட்டுமில்லை.
உயர்ந்த கொள்கைகளுக்காகச்
சாவதிலும் இருக்கிறது.

— அல்பெப்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் துன்பத்தையும்
இதயத்தில் தாங்கிக் கொள்பவனே
துன்பத்திற்கு பின்வரும் இன்பத்தை
அனுபவிக்க திடமுள்ளவனாகின்றான்.

- புத்தர்.


# நிவ் நிர்மலா ட்ரேடர்ஸ்

இல. 80, 4ம் குறுக்குத் தெரு

கொழும்பு.

☎ 01-432667

கிளை :-

# A. K. M. பேங்கர்

இல. 8, செப்பல் வீதி,

நுவரெலியா.

☎ 052-2208


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் என்பது நன்மையும் செய்யலாம்
தர்மம் என்பது தீமையும் ஆகலாம்
கட்டளைகளால் நேர்மையும் நாட்டலாம்
கட்டவிழப்பதால் கொடுமையும் தோன்றலாம்.


# தேவி ஜுவலர்ஸ்

அன்ட்

# பேங்கர்ஸ்

24 - 4/1, முதலாவது மாடி,

புதுக்கடை வீதி,

நுவரெலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# இந்தக் கங்கைகள் இன்னும் வற்றிவிட வில்லை!

— கவிஞர் லிங்கதாசன்

---

ஆம்! உண்மை தான்!
இந்தக் கங்கைகளோ!
இன்னும் வற்றிவிட வில்லைதான்!

எங்கள் திரு நாட்டின்
எழில் வளம் சேர்கின்ற
எந்தக் கங்கையுமே
இருந்தாப் போல் வற்றிடலாம்!
ஏனோ?... ஏனோ?

ஆதவனின் ஆட்சிக் கொடூரத்தால்!
அடாவடித் தனத்தால்! - எங்கள்,

மாதவள் மாவலியாள் - மலையில்
மனம் நொந்து வற்றிடலாம்!
மங்கையாள் களனியும்
மறுபுறத்தே வற்றிடலாம்!
வற்றிடலாம்! வற்றிடலாம்
ஆனால்... எங்கள்...

தங்கத் தமிழ் உள்ளமெலாம்.
தனியாத தாகத்தால்
பொங்கும் புத்துணர் வென்னும்
பூம்புனல் பெருக்கெடுத்து
எங்கும் இதய மெலாம்
எப்போதும் ஓடு கின்ற -

கங்கைகள் வற்றுமோ? வற்றாது! வற்றாது!
களிப்பூட்டி வருகின்ற சுதந்திர
மங்கையவள் மனம் நொந்த
மாபிழையால் இன்றுந்தான்!...

சோர்ந்தாளா? இல்லை! இல்லை!
சுடுகாடே யானாலும்,
வீழ்ந்தாளா? வெந்தழலால் சுட்டெரித்துப்
போட்டாலும் இதயம் அது
பொங்கும்! பெரு வெள்ளக்
கேட்டால் எம் நிலங்கள் ஏதுமிங்கே -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியவில்லை! அழியாத!
இலட்சியக் கடல் நோக்கி...
வழியும் விழி நீரை
வார்த்தாலும், உதிரத்தைப்
பொழிந்து இப்பூ மகளின்
பொற்பாதம் சாய்ந்தாலும்,

வற்றாது! வற்றாது!
வண்டமிழ் நெஞ்சத்தில்!
ஊற்றெடுத்து! ஓடுகின்ற
உணர்வூற்று ஒருநாளும்
வற்றாது!... வற்றாதே!...

பளபளத்து ஓடுகின்ற
பலநதிகள் உண்டவைகள்
சலசலப்புக் காட்டும்
சங்கீதம் பாடும் தான்!

வானம் பொழியாமல்
வானுரும் செங்கதிர்த்
தானம் வழங்காமல்
தடங்களே யுண்டானால்
வற்றிவிடும்! ஆனால்...
வெற்றியுடன் இந்தத்

தமிழ் நெஞ்சத் துள்ளிருந்து
தனியாமல் ஓடிவரும்
அமிழ்தஞ்சேர் கங்கைகளோ?
அறிவூற்றால் என்றென்றும்
வற்றாது! வற்றாது!

வாழும் உயிர்கட்கும்
வளரும் செடி கொடிக்கும்
மேலே வளருகின்ற
மேன்பைத் தருக்களுக்கும்

கதிர் மணிகள் சேர்க்கும்
கழனிகள் சோலைகட்கும்
புதிர் வளம் சேர்க்கப்
போவதால் இந்தக்
கங்கைகள் இன்னும்
வற்றிவிட வில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உளங் கனிந்த நல்வாழ்த்துக்கள்

# நிவ் பிரபா ஜுவலரி மார்ட்

50/4, லோசன் வீதி,

நு வ ரெ லி யா.

தொலைபேசி: 052-2919

நுவரெலியா இந்து கலாசாரப் பேரவையின் முதலாம் ஆண்டு விழா
சிறப்பு பெற நல்வாழ்த்துக்கள் நவில்கின்றோம்

# அ மு தா ஜு வ ல ர் ஸ்

இல. 20, (42) தினசந்தை கட்டிடம்,

கண்டி வீதி, நுவரெலியா.

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இருப்பவனுக்கு நன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாழ்த்துக்கள்

நாங்கள் சேற்றில் கால் வைத்தால் தான்
நீங்கள் சோற்றில் கைவைக்க முடியும்

# சிவா என்டபிரைஸ்

புலக் C I. லோசன் வீதி,
நுவரெலியா.

☎ 052-2941-2109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் கலாசாரமும்

— மா. கருணாநிதி, அதிபர் —
பரிசுத்த திரித்துவக் கல்லூரி - நுவரெலியா.

கலாசாரம் என்பது மிகப்பரந்த உள்ளடக்கத்தைக் கொண்ட ஓர் அம்சமாகும். கலாசாரம் என்பதனைக் குறித்துப் பல்வேறு வரைவிலக்கணங்கள் மனித நாகரிகத்தை அடியொற்றியவையாக எழுந்துள்ளன அறிவு, நம்பிக்கை, ஒழுக்கம், மரபுகள், சட்டம் பொதுவான திறன்கள் என்பவற்றை உள்ளடக்கிய கூட்டு அம்சமே கலாசாரம் எனப் பொதுவாக எற்றுக்கொள்ளலாம். இக் கலாசாரம் என்பது ஒரு காலகட்டத்திற்கேயுரிய நிலையான அம்சம் எனக் கொள்வதற்கில்லை. அது சமகாலச் சமூக நிகழ்வுகளுடன் மாறிச்செல்லும் இயல்பையும் உடையது குறிப்பாக அபிவிருத்தியடையும் நாடுகளிலே, சமூக பொருளாதார நிலைமைகள் அடிக்கடி நிலைகுலைந்து வருவதனாலே, அந்நாடுகளில் வாழும் மக்களும் தமது மரபு முறைப் போக்குகளுக்குப் பதிலாகத் தற்கால மாற்றங்களைப் பின்பற்றுவதில் ஆர்வங்காட்டி வருகின்றனர் கல்வியறிவுப் பரவினால் உலக ரீதியாக நாடுகளுக்கிடையே தொடர்புகளில் ஏற்பட்ட மாற்றம், செய்தித் தொடர்புகள் உருவாக்கிய உலகச் சுருக்கம் பல நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுவரும் ஒற்றுமையுணர்வு என்பன இவைக்குக் காரணமாயமைந்தன இதனால் மேற்குலகப் பண்புகள் கிழக்குலகிலும் கிழக்குலகப் பண்புகள் மேற்குலகிலும் பரஸ்பரப் பரிமாற்றத்தைப் பெற்றவண்ணம் இருக்கின்றன. இதே வேளையில் ஒவ்வொரு நாடும், இனமும், சமூகமும் தமக்கேயுரிய தனிப் பண்புகளைப் பாதுகாக்கவும். நிலைநிறுத்தவும் மிகுந்த ஆர்வங்காட்டி வருகின்றன.

கலாசாரம் பற்றிய சிந்தனையில் கல்விக்குறிய இடம் முதன்மையானது. ஒரு கலாசாரத்தின் பயன்களைப் பேணவும், அதற்கு இயல்பாக நடந்து கொள்ளவும், அதனைப் பரப்பவும் கல்வி அவசியமாகிறது. ஒரு சமூகமானது தகுந்தமட்டத்தில் கல்வியைப் பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது கல்வி கற்றோரின் அளவினையும் தகுதியையும் கொண்டு சமூகம் மதிக்கப்படுகிறது நல்ல சமூகத் தொடர்பும், உயர்ந்த மனப்பாங்கும் கல்வியினாலே வழங்கப்படுகிறது, நிகழ்காலப் போக்கினை மட்டும் கருத்திற் கொள்ளாது, எதிர்காலத்தையும் தகுந்த முறையில் ஆக்கிக்கொள்ள கல்வி உதவும். அதனால் ஒரு சமூகம் கற்ற சமூகமாக இருக்கவேண்டும். கல்வி சமூகத்திற்குரிய அவசியத் தேவை, என்பதால் அது என்றென்றும் கற்கும் சமூகமாகவும் இருக்கவேண்டும்.

ஒரு கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின். அதனைப் பின்பற்றி எழுகின்ற மனிதனைக் கலாசாரத்துக்குரியவனாக்குதல் வேண்டும் இது கல்வியின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். விரிந்த அறிவும், தெளிந்த சிந்தனையும், மனித நேயமும், ஒழுக்கமும் மனிதனைக் கலாசாரத்துக்குரியவனாக்குதல் என்ற அம்சத்தில் முக்கியமாகின்றன. எனவேதான் ஆரம்ப நிலையிலிருந்தே பிள்ளைகளிடம் நல்ல சிந்தனைகளைப் பிறப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில் கலாசாரச் சூழல் பொருத்தமானதாக உருவாக்கப்பட்டாலேயே கல்வி சிறப்புறும். கல்வியின் அவசியத்தை உணர்ந்து விருப்புடன் அதனைப் பெற முயற்சிக்க வேண்டும். மொழி, கலை, குடும்பம் அல்லது சமூகம் பொருத்தமானதாக அமைக்கப் படவேண்டும். பல்வேறு நாடுகளிலும் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து இவ்வுண்மை வலியுறுத்தப்படுகிறது. தன் தாய்மொழி, பேச்சு மொழியோ அன்றி வேறு மொழியினைப் பயிற்று மொழியாகக் கொள்ளும் குழந்தைகள் கல்வியில் தக்க தகுதி பெறுவதில்லை அதுபோலவே தாய்மொழியில் கல்வி பயின்றாலும் மொழி நலனை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புப் பெறாத பிள்ளையும் கல்வியில் நல்ல வளர்ச்சி பெறுவதில்லை. சிறப்பாகப் பாடசாலைக் கல்வியில் ஈடுபடும் மாணவர்களும் ஆசிரியர்களும் இக்கருத்தில் மிகுந்த அக்கறையுடையவர்கள் இருத்தல் நன்மை பயக்கும்.

மக்களைக் கலையுணர்வுடையவர்களாக ஆக்குவதும் நல்ல சூழலை அமைத்துக் கொடுக்கும். இத்தகைய உணர்வு மோலோங்கும் மிடத்துச் சாதாரண மனித வாழ்க்கையும் ஒழுங்குபடுத்தப்படும். இதுவும் கல்வியின் அடிப்படைகளுள் ஒன்றே. கலையுணர்வினால் மனிதன் இருவகையில் திருப்தியடைய முடியும். ஒருவகையில் தனது ஆக்கங்களை முன் வைப்பதனாலும், மறுவகையில் ஏனையவர் ஆக்கங்களை இரக்கத் தெரிவதனாலும் இவை நிகழலாம். இவற்றுள் இரண்டாவது வகையினரே ஒரு சமூகத்தில் பெரும்பான்மையினராக இருப்பர் என்பதால், நல்ல மனநிலையை உருவாக்கக் கல்வி அவர்களுக்கு உதவவேண்டும். பொது நடைமுறைகளின் கலப்புகளினால் ஏற்படும் சில வேண்டாத மாற்றங்களையே பெரிதென நம்பி, அவற்றினால் கவரப்பட்டு, நல்லவழியை மறந்து போகும் மக்கள் கூட்டத்திற்கு நிதானமான சிந்தனையைக் கொடுக்கக் கலையுணர்வு உதவும். அது சொந்தக் கலாசாரத்தைப் பேணவும் உதவும்.

கல்வியானது நடைமுறைத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எதிர் பார்க்கை எல்லோரிடத்திலும் காணப்படுகிறது. பொருளாதார ரீதியில் நல்ல தொழில் வளத்தினைப் பெற்றிருப்பதும் சிறந்த கலாசாரத்தின் ஓர் இயல்பாகும். மறுபுறத்தில் தொழில் ஒன்றைப் பெறுவதுதான் கல்வியின் முதன்மை நோக்கம் எனக் கருதிச் செயற்படும் சந்தர்ப்பங்களில் அவ் எதிர்பார்க்கையினால் பல எதிரிடை விளைவுகள் ஏற்படுகின்றன. அதனால் ஏற்படும் பிரச்சினைகளும் பாரதூரமானதாக அமைந்துவிடுகின்றன. உலகளாவிய ரீதியில் இளைஞர்களிடையே ஏற்படும் பிரச்சினைகள் இவ்வகையில் அமைந்தவை. இளைஞர்களிடையே முரண்பாடான சிந்தனைகள் தோன்றி எழுந்தமான போக்கிற் செயல்படுவதும், பெரியோர் கருத்துக்கு மதிப்பளிக்காதிருப்பதும் கலாசாரத்தின் அமைதியைச் சீர்குலைக்கிறது. குடும்ப அல்லது சமூகக் கலாசாரச் சூழல் பொருத்தமாக அமையாத இடங்களில் இத்தகைய பிரச்சனைகள் தோன்றுவதை நாம் நடைமுறையில் அவதானிக்கிறோம். ஆகவே நோக்கத்தினைச் சரியாக வரையறை செய்தல் முக்கியமானது என இதனால் உணரப்படுகின்றது.

இவ்வாறாக எடுத்துக்காட்டப்பட்ட சில அம்சங்களில் இருந்து கல்வியானது கலாசாரத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக அமைவதுடன், கலாசாரத்தினை வளர்ப்பதிலும் அதனைப் பேணிக் காப்பதில் சிறந்ததாகவும் விளங்குவதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து கலாசாரப் பேரவை வளர

# சிந்துபாடி வாழ்த்திடுவோம்!

⊕ தமிழோவியன் ⊕

வண்ணப் பூநிறைத் தோட்டங்களின்
வனப்பால் ஈர்க்கும் நுவரெலியா;
உண்ணப் பழங்கள் காய்கறிகள்
உவந்து நல்கும் பாங்கினைப்போல்;
இந்து கலாசாரப் பேரவையும்
இனிய பணிகள் செய்திடவே;
சிந்து பாடி வாழ்த்திடுவோம்!
சீரிய செயலால் சிறப்புறவே..!

★ ★

பசித்து நிற்போருக்கு ணவளிக்கும்
பரந்த உள்ளம் படைத்தவர்போல்,
ருசித்து மகிழத் துடிப்போருக்கு
நூல்கள் நயமாய் வெளியிடுக!
திட்டம்போட்டு இளையோர்க்குத்
தேவையான சேவை எல்லாம்;
கட்டங் கட்ட மாக இந்து
கலாசாரப் பேரவைத் தொடர்ந்திடுக!

★ ★

பதறிக் குமுறும் படித்தவர்கள்
பகையை வளர்த்துப் பிரிவதனால்;
சிதறியக் கரும்புக் கட்டாகச்
செம்மை குலைந்த நம்மினத்தை;
இதமாய் இணைத்து அணிதிரட்டும்
இந்து கலாசாரப் பேரவையே !
நிதமும் நல்ல தொண்டாற்றி
நிலைத்து வழர வாழ்த்துகின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவையின் சேவையை மென்மேலும்
வாழ்த்தும்

# ஸ்ரீ அம்பாள்ஸ்

( கிழங்கு வியாபாரிகள் )

இல. 135, சென் அன்றூஸ் ட்ரைவ்,

நுவரெலியா.

☎ 052 - 2869

மனம் நெகிழ்ந்து வாழ்த்துகிறோம்

# திரு. செந்தூரன் ட்ரேடர்

( கிழங்கு வியாபாரிகள் )

இல. 13, சென் அன்றூஸ் ட்ரைவ்,

நுவரெலியா.

☎ 052 - 2869

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையிலிருந்து சில துளிகள்..

— M. சிவபாலன் உப தலைவர் —
நுவரெலியா இந்துக் கலாசாரப் பேரவை

பகவத்கீதை பாரதத்துக்கு மட்டுமல்ல பாரகத்துக்கே பரந்தாமனால் உபதேசிக்கப்பட்ட நூலாக விளங்குகின்றது அருச்சுனனின் பண்பட்ட உள்ளமாகிய நிலத்திலே பக்குவமறிந்து பரந்தாமனால் விதைக்கப்பெற்ற கீதை உபதேசமாகிய வித்து முளைத்து, வளர்ந்து, தளிர்ந்து, செழித்து அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து தெவிட்டாத தெய்வீக கனிரசம் பொழியும் தருவாக உலகத்தில் என்றும் நிலைத்து நிற்கின்றது. கீதையாகிய அமுதக்கடலிலே இருந்து சிலதுளிகள் இதோ ......

- பொருள்களை நினைப்பதால் பற்றுண்டாகிறது. பற்று ஆசையாகப் பரிணமிக்கின்றது. ஆசை சினமாக வடிவெடுக்கின்றது

- சினத்தால் மனக்குழப்பம், குழப்பத்தால் நினைவின்மை, நினைவு இன்மையால் புத்தி நாசம், புத்தி நாசத்தால் மனிதன் அழிகின்றான்.

- மன அமைதியில் மனிதனது துன்பங்களனைத்தும் ஒழியும், ஏனெனில் மனவமைதியுடையவனுக்கு அறிவு விரைவில் ஆத்ம சொரூபத்தில் நிலை பெறுகிறது.

- மனமடங்காதவனுக்கு ஆத்ம பேதமுமில்லை. ஆத்ம பாவமுமில்லை ஆத்ம தியானமில்லாதவனுக்கு சாந்தி கிடையாது. சாந்தியில்லாதவனுக்கு ஏது இன்பம்?

- கப்பலை காற்றானது நீர்மேல் நிலைகுலைப்பதுபோல அலைகின்ற இந்திரியங்களைப் பின்தொடரும் மனது அவனது விவேகத்தை அரிக்கின்றது

- அசைவற்ற நிறைகடலில் ஆறுகள் சென்று அடங்குவதுபோல எம் முனிவன் பால் ஆசைகளனைத்தும் சென்றடங்குகின்றனவோ அவனே சாந்தியடைகின்றான். ஆசையுள்ளான் சாந்தியடையான்

- கர்மேந்திரியங்களை அடக்கி இந்திரிய விஷயங்களை மனதால் எண்ணிக்கொண்டிருக்கும் மூடன் பொய்யொழுக்கமுடையவனென்று பகரப்படுகின்றான்.

- நெருப்பானது புகையினாலும், கண்ணாடி அழுக்கினாலும் சிசு கருப்பையினாலும் மூடப்பட்டிருப்பது போன்று ஞானம் ஆசையினால் மூடப்பட்டிருக்கிறது.

- எவனது கர்மங்கள் எல்லாம் ஆசையும் சங்கற்பமும் அற்றனவோ எவனது கர்மங்கள் ஞானத்தீயால் எரிக்கப்பட்டனவோ, அவனைப் பண்டிதன் என்று ஞானிகள் பகருகின்றார்கள்.

- புறப் பொருள்களில் மனம் பற்றாதவன் ஆத்மாவில் இன்பம் எய்துகின்றான். பிரம்ம சமாதியில் மனதையுடைய அம்மனிதன் அழியாத சுகத்தையடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீண் ஆசையுடையவர்கள் பயன்படாச் செயலாளர்கள், கோணலறிவுடையவர்கள், விவேக மில்லாதவர்கள் மையலூட்டுகின்ற ராட்சச இயல்பை அடைகின்றனர்.

- வானத்தில் ஆயிரம் சூரியர்களுடைய ஒளியானது ஒருமித்து உதித்திருக்குமானால் அது மகாத்மாவின் ஒளிக்கு ஒப்பாகும்.

- நாசமடைதற்கு விட்டிற் பூச்சிகள், வெந்தணலில் விரைந்து வீழ்வது போன்று, நானிலத்து மாந்தரும் நாசமடைதற்கே.

- எங்கும் ஒப்ப நிலைத்திருக்கும் ஈசனைக் காண்போன் தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றானில்லை. அதனால் அவன் பரகதியடைகின்றான்

- பகைமையும், நட்பையும் அங்ஙனம் மானத்தையும் நிகராக்கிக் குளிர் வெப்பம் இன்ப துன்பம் இவைகளை ஒப்பாக்கிப் பற்றற்றவன் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒன்றாகக் கருதும் மௌனி, கிடைத்ததில் திருப்தியடைபவன் இருக்க இடம் தேடாதவன், உறுதியான உள்ளமுடையவன்

- எங்கும் நிறைந்துள்ள ஆகாயமானது நுண்ணியதாயிருப்பதால் எப்படி களங்கமடைவதில்லையோ அப்படியே தேகமெங்கும் நிறைந்துள்ள ஆத்மா களங்கமடைவதில்லை.

- தற்புகழ்ச்சியடையார், வணக்கமிலார், செல்வச் செருக்கும் மதமுமுடையார் பெயரளவில் யாகத்தை விதிவழுவி ஆடம்பரத்துக்காகச் செய்கின்றனர்.

- காமம், குரோதம், உலோபம் ஆகிய மூவித வாயிலையுடையது நகரம். அவை ஜீவனைக் கெடுக்கும் தன்மையுடையன, ஆகையால் இம்மூன்றையும் துறப்பின் சிறப்பே.

- ஆராதனையாகச் செய்தே ஆகவேண்டுமென்று மனதை உறுதிப்படுத்திக் கொண்டு, வினைப்பயனை விரும்பாதவர்களால் சாஸ்திர விதிப்படி எந்த யாகம் செய்யப்படுகின்றதோ அது சாத்வீகமானது

- துன்புறுத்தாத வாய்மையும், இனிமையும் நலனும் கூடிய வார்த்தை, மற்றும் வேதம் ஓதுதல் ஆகியன வாக்குமயமான ஒதுதல் ஆகும்.

- மன அமைதி, அன்புடைமை மௌனம், தன்னடக்கம், தூய நோக்கம் ஆகியன மானசீகமான ஒருத்தல் ஆகும்.

- தக்க இடத்திலே, வேதனையிலே பிரதியுபகாரம் செய்யாதவர் எனினும் தகுந்த பாத்திரமாயுள்ளவர்க்குத் தானம் செய்வது முறையெனக் கருதி வழங்கும் தானம் சாத்வீகமானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் வாழ்த்துகிறோம்

# எஸ். வீ. ஏஜென்சி

இல. 5 சென் அன்றூஸ் ட்ரைவ்,

நுவரெலியா.

☎ 052-2847

மனம் நெகிழ்ந்து வாழ்த்துகிறோம்

# இராஜலெட்சுமி ஸ்டோர்ஸ்

இல. 18-19, சென் அன்றூஸ் ட்ரைவ்,

நுவரெலியா.

☎ 052-2574



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments*

*from*

கடுகு அரிசியினைகள் தரையில் கொட்டிவிட்டால்
உடனே பொறுக்குவதை ஓர் புரத்தில் சேர்த்திடலாம்
வார்த்தையினை கொட்டிவிட்டால் மறுபடியும் திரும்பாது

# U. L. SENIVERATNE

**No. 11, Manning Market,**

**Pettah,**

# COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்கள் சிலவற்றில் இருந்து பக்தியின் சிறப்பு

— க. தவநிதி —
ஆசிரியை நல்லாயன் மகளிர் கல்லூரி

இறைவனிடத்தில் முறுகிய அன்பே பக்தி எனப்படும். மாணிக்கவாசக சுவாமிகள் 'பத்தி வலையிற் படுவோன் காண்க' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவர் திருவாக்கின்படி இறைவனைப் பற்றி நின்று பேரின்பத்திலே திளைப்பதற்குப் பத்தி ஒன்றே சாதனம் என்பது புலனாகின்றது திருவருட்பயனாசிரியரான உமாபதி சிவாச்சாரியர்,

'ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்'

எனவும், ஔவையார் ''இறைவன் தொண்டருள்ளத்துள் ஒடுக்கம்'' எனவும் கூறியவற்றையும் இங்கு நினைவு கூறலாம். இறைவனுக்குத் தம்மை முற்றாக அடைக்கலம் அளித்து, ''நன்றும் தீதும் அவன் தரவருவனவே'' எனக்கொண்டு, என்றும் உறுதியான பத்தி செலுத்தும் அடியார்க்கு இறைவன் எளிதில் வந்து அருளுவான், என்பதற்கு ஐயமில்லை. பக்தியின் வலிமையானது இறைவனை அடியார்க்கு எளியவன் ஆக்கி விடுகிறது, என்றால் அதன் பெருமை சொல்லுதல் இயலாதாகும்.

இறைவனின் திருநாமங்களை இடைவிடாது ஓதுதல், அவனின் பெருமைகளை நினைத்து உருகல், அவனுக்கு அடியராய் உள்ளவரை அவனாகவே நினைத்து வழிபாடியற்றல், ஆலயங்களிலே சென்று தொண்டு புரிதல், திருவுருவத் திருமேனியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் இறைவனை அழுதம் தொழுதும் வழிபடல், கூத்தாடல், புனைந்து பாடல் என்று பலவும் பக்தியின் புறச்சின்னங்கள் எனலாம். இவை ஆண்டவனுக்கு அடிமைத்திறம் பூண்ட அடியார்தம் கனிந்த உள்ளங்களின் புறச் செயல்களாகும். இந்தச் செயல்கலைப் புரிந்து எமது சைவசமயத்திற்கு வழிகாட்டிய சமயாசாரியர்களுள், சம்பந்தர், சுந்தரர், அப்பர் சுவாமிகள் போன்றோர் முதன்மையானவர்கள் இவர்களின் பத்தி பரவசமான உள்ளங்களிலிருந்து வெளிப் பெற்ற பாமாலைகள் தேவாரம் என்ற பொதுப் பெயரால் வழங்கும். தெய்வத்திற்குச் சூட்டப்படும் மாலை எனவும், தெய்வத்திற்கு உரிமை பூண்ட திருப்பாடல் எனவும், பொருள் தரும்.

ஓர் சந்தர்ப்பத்தில் 'அர்ச்சனைப் பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் தம்மைச் சொற்றமிழ் பாடுக' என்று சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குச் சிவபெருமான் கட்டளையருளினார் என்பதும் குறிப்பிடத்தக்கது மற்றும் தேவாரங்களிலே சம்பந்தர் பாடியருளியவை முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன இவை இறைவனைத் தந்தையாகவும் தம்மைப் புத்திரராகவும் பாவனை செய்து பாடியருளப்பட்டவை என்பர் இப்பெரியாரது தேவாரங்களிலே தந்தை மகன் அன்புத் தொடர்பு சிறப்பாகப் புலப்படுகின்றது, என்பதற்கு ஐயமில்லை. சிறு குழந்தையானது தனது தேவைகளுக்கெல்லாம் தன் பெற்றேரிலேயே தங்கியிருக்கும் இயல்பும் அவர்களையன்றி வேறு யாரையும் சாராத போக்கும் குழந்தையின் முதன்மையான பண்புகள் இவ்விடத்தில் திருஞானசம்பந்தப் பெருமானும் இத்தகைய ஒரு குழந்தையே. அவர் எப்பொழுதும் அம்மை அப்பனாகிய இறைவனையே எதற்கும் நாடுவார் இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கூறும்போது, 'வாசி தீரவே காசுநல்குவீர் மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே' என்பார். திருநாவுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரசர் திருமறைக் காட்டுத் திருமத்திலே வைத்து உமக்கு நாளும் கோளும் நன்றாயில்லை சமணர் கொடியர் மந்திரங்களில் வல்லவர் அவர்களின் வலி தொலைக்க நீர் மதுரைக்கு எழுந்தருள் உடம்படுவது ஒண்ணாது என்று சம்பந்தருக்கு அறிவுரை கூறியபோது சம் பந்தர் உரைத்ததாவது.

'ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல அணுநல்ல நல்லஅடியாரவர்க்கு மிகவே' என்று தமது உறுதிப் பாட்டினை, எதற்கும் இறைவனிலே சார்ந்திருக்கும் தமது இயல்பினை அவர் இவ்வாறு புலப்படுத்தினார். மங்கையற்கரசியார் சமணரின் ஆரவாரங்களைக் கண்டு அவர்களைப் பாலறாவாயரால் வெல்லமுடியுமோ என்று நினைத்து அஞ்சி அயர்வுற்ற காலத்திலும் சம்பந்தப்பெருமான் அஞ்சவில்லை 'ஈனர்கட்கு எளியனல்லேன் திரு ஆலவாயான்நிற்கவே' என்று இறைவன் மீதே அவர் பாரத்தைப் போட்டார். அதுமட்டுமன்றி 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் 'பெற்ற அப்பெருந்தகையார் இடரினும் தளரினும் தமது உறுநோய் அறிந்து தீர்க்க வல்லவர் இறைவனே என்ற நம்பிக்கையில் வாழ்ந்தவர் அந்த நம்பிக்கை என்ற பக்தி உறுதிப்பாடு அவரின் தேவாரங்கள் யாவிலும் சுடர்விடு கின்றன எனலாம்

அன்பினை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நாயகன் பெயர் கேட்ட மாத்தி ரத்தே தன்வசம் இழந்து அவன் வசமாகி அவனையே நினைத்து உருகும் அன்பு தலை யாய அன்பு. இது ஒரு வகை. நாயகனைக் கண்ட மாத்திரத்தே அவனுக்கு ஆட்பட்டு உருகும் நிலை இடையாய அன்பு. இது மற்றொருவகை நாயகனைக் கண்டு பழகி அந்த அனுபவத்தால் விளையும் அன்பு மூன்றாவது வகை இதனைக் கடையாய அன்பு எனப்படும்.

மருணீக்கியாராய் அவதரித்துச் சைவராய் வாழக் கிடைத்தும் முன்னைத் தவக் குறைவால் அமணராய் மாறியவர் அப்பர் சுவாமிகள். அந்த இழிநிலையிலிருந்து மாறிய வர் தமக்கையாராகிய திலகவதியார் உதவியால் நீங்கி இறைவனுக்கு ஆட்பட்டு அடிய வரானார். இவரது பதிகங்கள் **கண்**ணீரை மழையாகப் பொழிந்து கசிந்துருகிப் பாடியுள் ளமையை நோக்கலாம். இவர் இறைவன் பால் கொண்ட அன்பினை ஆண்டான் அடிய வன் தொடர்பினை ஒத்ததாகும்

சுந்தரமூர்த்தி நாயனாரது பத்தி மேம்பாட்டை நோக்கின் வாதிட்டு வழக்கு ரைத்து வன்றொண்டராய்ப் பக்தியில் இறைவனையே தோழனாய்க்கொண்டு உரிமைப் பாட்டுடன் பக்திப்பனுவல் இசைத்த பெருமை இவரையே சாரும். சுந்தரரது வாழ்க் கையை நோக்கும்போது அது உலகியற் சார்புகூடியது போலத் தோன்றும் ஆனால், அவர் யோக நிலையில் நின்று இறைவனைத் தம்முன்னே கண்ட பெரியார் ஆவர். இவ ரது நட்பின் உரிமைப் பாட்டினால் இறைவனையே ஏசும் இடங்களும் அவரின் திருப்பதி கங்களிலே காணப்படுகின்றன ''ஆளாங்கிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக் கால் வாளாங்கிருப்பீர் திருவாரூரீல் வாழ்ந்து போதிரே'' என்பதில் இருந்தும், இன்னும் ஓர் இடத்தில் 'வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால் மற்றும் நான் அறியேன்'' எனவரும் அடிகளிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பக்தி உறுதி 'பாடு எடுத்தறியப்படுவதினை நாமும் அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு பலப்பல வழிகளாலும், முறைகளாலும், போக்காலும், நோக்காலும் உயர்ந்த பக்தி அனுபவங்கள் தேவாரங்களிலே மிகச்சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள் ளன. எனவே குறிப்பாக 63 மெய்யடியார்களது வரலாறுகளில் இருந்தும் தொகையடி யார்களது வாழ்க்கை வரலாறுகளாலும் எம்மைப் பக்தி வெள்ளத்துக்குள் இழுத்துச் செல்லு வதற்கு அமையப் பெற்றவை என்றால் மிகையாகாது எனலாம்.

— முற்றும் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் வாழ்த்துகின்றோம்

ரவீன் டிரேடர்

இல. 6, கண்டி வீதி,

நுவரெலியா.

தொலைபேசி : 052-2268

பேரவையின் சேவை நாட்டுக்குத் தேவை

சாந் வீடியோ

இல. 01, தினசந்தை கட்டிடம்,

நுவரெலியா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்

# மகஜன் ட்ரேடர்ஸ்

இல. 99, 4ம் குறுக்குத் தெரு

கொழும்பு - 11.

☎ 01-422561



பேரவையின் முதலாண்டு நிறைவை பெருமையுடன் வாழ்த்தும்

# நந்தன ட்ரேடர்ஸ்

இல, 4, கண்டி ரோட்

நுவரெலியா.

தொலைபேசி: 052-2931


கைவிரல் கண்களில் படுவதுண்டோ


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!"

K. திருமதி. பத்மநாதன்
பேரவை உறுப்பினரும் அறநெறிப் பாடசாலை ஆசிரியரும்

"பெரியது எது ?" என்று வினாவெழுப்பிய அழகன் முருகனுக்கு விடைபகர வந்த ஔவைப்பிராட்டி "பெரியது கேட்கின் வரிவடிவேலோய்" என்று தொடங்கி "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று முடிக்கின்றார் பெருமைய டைவதற்கு எத்தனையோ காரியங்களிருப்பினும் அவற்றுள்ளெல்லாம் தொண்டருடைய பெருமை சொற்களால் விவரிக்கற்பாலது என்பதே ஔவையின் கருத்து அதற்கு இசைவு தருகிறான் வேலவன்.

கருணையும் பரிவும் நிறைந்த நெஞ்சமாகிய விளைநிலத்திலேதான் தொண்டு மனப்பான்மை என்ற புனிதப்பயிர் விளைகின்றது. தன்னலமற்ற சேவை என்ற கருணா மழையினால் அப்பயிர் செழித்து வளர்ந்து இன்னலுறும் எத்தனையோ இதயங்களிற்கு இதமளிக்கின்றது சமூகத்தொண்டு, கல்வித்தொண்டு, சமயத்தொண்டு, வைத்தியத் தொண்டு, தேசத்தொண்டு எனப்பல துறைகளில் தொண்டுகள் ஆற்றப்படுகின்றன. துறைகள் பலவாயினும் அனைத்தும் சமுதாய மேம்பாட்டையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஒழுக்கமும் பண்பாடும் சிறந்து விளங்கி, கல்வியில் சிறப்புற்று, ஆரோக்கியமான ஒரு சமுதாயம் சுபீட்சமாக வாழவேண்டுமாயின் மேற்காணும் துறைகளில் தன்னலமற்ற தொண்டர் பலர் பணியாற்றியே தீரவேண்டும் அவர்கள் தம் பெருமை அளவிடற்பாலது. எனவேதான் "மக்கள் சேவையே மகேசன் பூசை" என்கிறது இந்து மதம். பணப்பெருமையை நிலைநாட்ட செய்யப்படும் ஆடம்பரமான பூஜை புனஸ்காரங்களை இறைவன் ஏற்பதில்லை தூய்மையான சமூகப்பணியே ஆண்டவன் விரும்பும் பூஜைகள். "அன்ன சத்திரம் ஆயிரம் கட்டலினும் ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்" உன்னதமான தொண்டு என்று பாடுகிறனே கவிஞன் பாரதி. இதன் தத்துவம் என்ன? ஏழை ஒருவனுக்கு ஆற்றப்படும் கல்விப்பணியினால் சமுதாயமே நலன் பெறுகிறது என்பதே.

ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வி அறிவு இல்லாதவர்கள் ஆகிய இவர்களே தெய்வங்களாக விளங்கட்டும்" இவ்வாறு கூறுகிறார் சுவாமி விவேகானந்தர். அவர் கூறுவதன் உட்பொருளை உற்று நோக்கின் இறைவனுக்காக நாம் செய்ய விழையும் அனைத்தையும் இவர்களுக்காக செய்தரோல பெரும் சமயத்தொண்டாக, இறைவணக்கமாக ஆகிவிடும் என்பதாகும். எனவே வெறும் சடங்குகளாக அமையும் பூஜைகளும் உற்சவங்களும் மட்டுமே இந்துசமயப் பணிகளாகாது என்பதை வீர சந்நியாசியே விளக்குகின்றார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குறிய தொண்டர்கள் பலர் தம் சுகபோகங்களை உதறிவிட்டு வாழ்க்கையையே பிறருக்காக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள், அவர்களின் நாமங்கள் உலகம் உள்ளளவும் வாழ்ந்தே சிறக்குமென்பதில் ஐயமில்லை இவர்களில் ஒருசிலரை நினைவு கூர்வோம். சரியைத் தொண்டிலேயே தம் வாழ்நாளை அர்ப்பணித்து பக்தியின்பம் கண்டவர் திருநாவுக்கரசு நாயனார். இந்து சமயத்தின் பெருமையை அமெரிக்காவரை எடுத்துச் சென்று வெற்றிக்கொடி நாட்டி துறவற இன்பம் கண்டார் சுவாமி விவேகானந்தர். இன்னும் விபுலானந்தர், ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள், ரமணரிஷி போன்றோர் இன்னும் நம் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தொண்டுகளால் இந்து சமயமும் வாழ்ந்துகொண்டிருக்கிறது, மகாத்மா காந்தியின் தொண்டு தேசத்தொண்டாக பரிமளிக்கிறது.

இந்து சமயம் மட்டுமல்ல எல்லா சமயங்களும் அன்பையும் கருணையையும் பொதுப்பணிகளையும் மேற்படுத்தியே இயம்புகின்றன தற்போதைய காலகட்டத்தில் பணமும் பதவியும் சுகபோகங்களும் கொண்ட மனிதனிலிருந்து ஒன்றுமில்லா ஏழைவரை அனைவரும் அமைதியும் சாந்தியும் இன்றி அல்லலுறுவதைக் காண்கிறோம். பொய்யான அற்ப இன்பமும் நீண்ட பிரச்சனைகள் மலிந்த துன்பமுமே சுயநல வாழ்க்கையில் பொதிந்துள்ளது. தனக்காகவும் தன்குடும்ப நலனுக்காகவும் மட்டுமே வாழ்கின்றவன் நிம்மதிக்காக ஏங்கித் தவிப்பதைக் காண்கிறோம். ஆனால் பிறருக்காக சிறிய தொண்டாயினும் செய்துவாழ்பவன் பெரியதொரு அமைதியையும் ஆத்ம திருப்தியையும் அடைகிறான். அவனுள் இறைவன் உறைகிறான் அநாதை ஒருவனுக்குக்கூறும் ஆறுதல் வார்த்தைகள்கூட பெருமைக்குரியனவே இதயபூர்வமான பரிவும் பாசமும் கொண்டோர், பிறர் துன்பம் காணுமிடத்து ''உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே இடுக்கண் களையச் செல்வதைக் காணலாம். அதனால் அவர்கள் இனம்புரியாத இன்ப உணர்வினை அடைகின்றனர் ஆகவே அமைதியை நாடும் ஒவ்வொருவரும் ஏதாயினும் தொண்டுகளில் ஈடுபடுதல் சாலச்சிறந்தது. முருகனே ஏற்றுக்கொள்ளும் வகையில் ஔவைப்பிராட்டி தொண்டர்தம் பெருமையைப் பாராட்டினாராயினும் நமது இந்து சமயத்தவரிடையே பொதுப்பணி நோக்கு குறுகி காணப்படுவதை நாம் மறுக்கவியலாது. தொண்டுகளிலீடுபடும் மனப்பான்மை அருகியே விளங்குகின்றது பெரும்பாலோர் தாம் உண்டு தம் குடும்பம் உண்டு என்று ஒதுங்கிவாழ்வதையே விரும்புகின்றனர் கோயிலுக்குச் செல்வதுகூட சுய நன்மையை மனதிற்குறித்தேதான். இதனால் இந்துசமய சமுதாயம் பெறவேண்டிய பல நன்மைகள் முன்னேற்றங்கள் விரயமாகிவிடுகின்றன அன்பும் அருளும் இல்லாத சுயநல சமுதாயமாக மாறி நிற்கின்றது. இந்நிலை மாறி இந்து சமயத்தைச் சார்ந்திருப்போர் பொதுநலப் பணிகளில் ஈடுபடுவார்களாயின் எம் சமயத்தின் பெருமை மேலும் துலங்கும் அவர்கள் மகத்தான இதய சாந்தியை எய்துவர் தற்போது நிலவி வரும் மதமாற்றங்கள் மறைந்துபோவதோடு எமது சமுதாயமும் உயரிய உன்னத நிலை அடையும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

பண்பே தெய்வம் பரிவே தெய்வம்
பணியே நம் தெய்வம் நற்பணியே நம் தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேளடி கண்மணி

செ. திலகராணி
உதவிச் செயலாளரும்
அறநெறிப் பாடசாலை ஆசிரியரும்

ஆண்டு பதினொன்றை கடந்தபின் அநேகருக்கு அம்போ என்ற நிலை. இனி என்ன செய்வது, என்ற விரக்தி நிலைக்கு ஆண்களோ தள்ளப்படும் போது, பெண்களின்நிலை சொல்லவும் வேண்டுமே? அரச பதவிகளும் ஆள் உதவிகளும் எல்லோருக்கும் கிடைப்பதில்லை அதற்காக காலத்தை வீணாக்குவது, அர்த்தமற்றதாகி விடுகின்றது. இந்த நிலையில் பெண்களின் எதிர் காலம் சுமை, பொறுப்பு என்ற வர்ணணைக்கு உள்ளடக்கப்பட்டு தனக்கும் குடும்பத்திற்கும் கேள்விக்குறியாகும் நிலை தோன்றுகிறது. இந்நிலையைத் தவிர்ப்பதற்கு பெண்கள் ஆகிய நாம் மாணவப் பருவத்திலிருந்தே எமது அறிவு திறன் என்பவற்றை உரிய முறையில் இனம் கண்டு எம்மால் எது முடியுமோ அதை உண்மையாகவே அளவீடு செய்து சுயதொழில் அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

மனைவியற்கலை தையற்கலை அழகியல் கலை என்பன பெண்கள் அறிந்திருக்க வேண்டிய அத்தியாவசிய தொழில் கலைகளாகும். அவற்றின் நுணுக்கங்களை உரிய முறையில் கற்று சந்தர்ப்பங்களை சாதகமாக பயன் படுத்திக் கொண்டால் பெண்கள் எதிர்காலம் பற்றிய இறுக்கமான நெருக்கடிகளை இலகுவாக்கிக் கொள்ளமுடியும்.

எமது அயல் நாட்டிலே பெண்குழந்தைகள் பிறந்தவுடன் கழுத்தை நெரித்து கொன்றுவிடும் சம்பவங்கள் திரைமறைவில் தாராளமாக இடம் பெறுகின்றது. இவற்றின் காரணங்கள் நாம் அறிந்தவைகளே.

உலகத்திலே எந்த ஆணினாலும் சாதிக்க முடியாத தாய்மை எனும் உயர் சிறப்புக் கொண்ட பெண் ஒருத்தியால்தான் நல்ல மனைவியாகவும், சிறந்த குடும்ப நிர்வாகியாகவும் எதிர்காலத்தில் சமுகத்துக்கு வேண்டிய நற் பிரஜைகளை உருவாக்கும் தாயாகவும் திகழமுடியும். அத்தகைய சிறப்புக்கள் அனைத்தையும் பெற்ற பெண்ணே நீ உன் பெருமைகளை மறந்து விடக் கூடாது. உடலை விற்றல் என்ற செயல் தவிர்ந்த வேறெந்த தொழில் செய்தும், மற்றவர்களுக்கு இணையாக சுயமரியாதையோடு வாழ வழி தேடிக் கொள்ளவேண்டும்.

உளவலிமையோடு உடல் வலிமையும் சேர்த்துத்தான் ஆரோக்கியமான சிந்தனைகளை உறுவாக்கவும் செயல்படுத்தவும் முடியும் பெண்மைக்கு மென்மை எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு உள்ளத் திண்மையும் முக்கியம்.

ஆகவே கண்மணி போன்றவளே காலத்தை பொன்னாக்க கற்றுக் கொள் சுய தொழில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from :-

# COMMERCIAL TECHNIQUE

- Computer Studies
  Basic, Fortran Dbase III x Cobol Programming
- International Association of Bookkeepers (IAB - UK)
- Pitman Shorthand & Typing
- Intensive English & Writing & Spoken
- Tutorial Classes for G. C E. O/L & A/L

**7, Long Street,**
**NUWARA ELIYA.**

அன்புடன் வாழ்த்தும்

**சத்தியா பேங்கர்ஸ்**

இல. C-1 சிவா கொம்லக்ஸ்

லோசன் வீதி,

நுவரெலியா.

☎ 2687-2923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளுள் கவிதை. . .

கட்டுரை ஆக்கம்
— எஸ். ஜி. வீ, சந்திரகுமார் —
இல 3, பிரதான வீதி, இறம்பொடை.

பரந்துப்பட்ட மானுட சமூகமானது பல்வேறுப் பிரிவாக பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருப் பிரிவும் ஏதோ ஒரு வகையில் தத்தம் ஆற்றலுக்கேற்ற வேகமான உலக வளர்ச்சியின் தன்மைக்கேற்றதான பங்களிப்பை கலையம்சங்களாக வெளிப்படுத்தி உள்ளமைக் கண்கூடு

அந்த வகையில் பொதுவாக, ''கலை'' - எனும் சொல்லில் காணப்படும் தாற்பரியத்தை ஆழ்ந்து நோக்கும்போது, அது ஒரு சாதாரண உள்ளத்தில் இருந்து எழுபவை அல்ல, சுயமாக ஒருவனுக்கு ஏற்படும் இன்ப, துன்ப உணர்ச்சிகளை பலரோடு பகிர்ந்துக் கொள்ளுமுகமாக, வார்த்தை ஜாலங்களாலும், சிற்ப, ஓவிய வடிவங்களாலும் சிறப்பாக அமைத்திடும் வல்லமையின் வெளிப்படுத்தலே ''கலை'' என நாம் வரையறுத்துக் கொள்ளலாம்

ஒரு நாட்டில் வாழும் பல்லின மக்கள் கூட்டத்தினரும், காலத்தால் அழியாத கலைப்பொக்கிஷங்களிடையே வாழ்க்கை நடாத்துகின்றனராயினும், அவற்றினின்றும் பெறவேண்டிய உன்னத கலை இன்பத்தை நுகரத் தவறிவிடுகின்றனர்

அவர் தம் மத்தியில், எந்தளவிற்கு கலை வளம் பெறுகின்றதோ அதைவிட பன்மடங்கு, கலாசாரமும், காவியமும் செழித்து ஓங்கும் என்பதுவும் வரலாற்றாதாரங்களாகும்.

அந்த வகையில், மானுட இன்பத்தினை மூன்றாக வகுக்கும் இலக்கியவியலாளர்கள், சிற்றின்பம் பேறின்பம் கலை இன்பம் - என வகுத்துள்ளனர். இவற்றுள், எதிர்பாலரிடையே, ஏற்படும் இன்பம் சிற்றின்பமாகவும், இறைவனோடு இரண்டறக் கலக்கும் இன்பம் பேரின்பமாகவும், கலையோடு கலக்கும் காதல் கலை இன்பமாகவும், கருதும் கருவூலக்கர்த்தாக்கள், இயல், இசை நாடக, சிற்ப, ஓவிய வாயிலாக தூய்மையான மனநிலையின் மத்தியிலே, எழும் இன்பமே ''கலை இன்பம்'' - என்று மேலும் நிரூபிக்கின்றனர்.

இத்தகைய கலையின்பத்தை சற்று நுணுகி, ஆராயும்போது, அது பல்வகை அம்சங்களாய் பகுக்கப்பட்டிருந்தாலும், பின்னர் வந்த கற்றுணர்ந்த அறிஞர்களதுக் கணிப்பீட்டின்படி, சாதாரணக்கலை, நுண்கலை என இரு பெரும் பிரிவுக்குட்பட்டதாக கலை இலக்கியங்கள் சான்று பகருகின்றன,

அவற்றுள் அன்றாடக் கடமைகளான உணவு தயாரித்தல், முதற்கொண்டு உறக்கம் கொள்வதை வரையிலானவற்றை சாதாரணக்கலை, கதை, கவிதை, கட்டுரை, இசை, சிற்பம், ஓவியம், நாடகம், கட்டிடம் - என்பனவற்றை நுண்கலைகள் என்றும் ஆய்வாளர்கள், அறிக்கைப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகின் பிரதிபலிப்பாய் அலங்கரிப்பது கலைகளே- சிற்பங்களின் வடிவமைப்பிலும், ஓவியங்களின் வண்ணங்களிலும், மங்கையரது வடிவம் மலருவதற்கும் இதுவே காரணம் என்று கூடக் கூறலாம்.

ஆதவனின் உதய, அஸ்தமனங்களை அற்புதமாக ஒப்புவிப்பதையும், ஆம்பல் மலருவதை அதிசயமாய் பிதற்றுவதையும், வெண்புரவியாய் பாய்ந்தோடி வரும் வெள்ளாற்றை வியப்பதிலும், பச்சைப் பசேலென படர்ந்திருக்கும் இயற்கையின் கொடைகளில் இன்புறுவதையும், வளர்ந்து நிற்கும் வனங்களை வாயாரப் புகழ்வதிலும், நீலக் கடல் மீதனில் நீந்தி மகிழும் விதத்தினை விளம்புவதிலும் கலையானது, தனது பங்கை வியாபித்துள்ளது.

இத்தகைய இன்பச் செழிப்பை நுகர சிற்ப, ஓவிய சிருஷ்டிக்கர்த்தாக்களால் ஓர் குறிப்பிட்ட எல்லை தாண்டவியலாது உள்ளது.

ஆனால் ஒலியை மட்டும் விஸ்தீர எல்லையாகக்கொண்ட கவிதையில், கவிஞனின் தன்னிச்சையான சுதந்திரம் தடைப்பட இடமில்லை

இதனாலேயே, ''கவிதைக்கலை - ஏனைய எல்லாக் கலைகளைவிட, ஒப்பீட்டு ரீதியில் முதன்மை வகிக்கின்றது'' என்று காலக்கண்ணாடிகள் ஆதாரப்படுத்துகின்றன.

பா புனையும் பாவலன் ஒருவன் மானுட ''சுகம்'' - எனும் ஆழ்கடலில், ''போராட்டம்'' - எனும் புரட்சி அலையின் கண்ணே, ''உறுதி'' எனும் துணைகொண்டு மூழ்கி, ''சுய அனுபவம்'' - எனும் அரிதிலும், அரிதான முத்தைக்கொணர்ந்து வந்து இயற்கையின் கொடைகளோடு இரண்டறக்கலந்து, அவற்றின் விளைவுகளை தன்னகத்தே எழும் இன்பச்சுவையோடு சங்கமித்து, அதனையே இலட்சியமாகப் பரிணமிக்கச் செய்கின்றனர்.

பாரத நாட்டினின்று பைந்தமிழ் காவியச் சிறப்புகளால், பரம்பரை, பரம்பரையாக தொன்று தொட்டு வழங்கப்பட்டு வந்த இக்கலைகளே காலத்தால் அழியாத காவியங்கள் தழைத்தோங்க காரணமாய் இருந்தமை ஸ்தூலமாகின்றது.

எனவே ''உள்ள'' மெனும் மலைச் சிகரத்தினின்று ''உணர்ச்சி'' - எனும் அருவியாய் ஊற்றெடுத்து ''இன்பம்'' எனும் பயிர்தனும் வளர்ந்திடவே இக்கலைகளனைத்தும் ஒருங்கிணைந்து உறுதுணைப்புரிந்திட வேண்டும் மலையகத்தோர் வாழ்வினிலே . . . !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஐம்பூதங்களின் அரவணைப்பு"

என் தமிழே ! அமுதான மொழியே !
கவியரங்கக் கன்னி - நான்
கரம் கூப்பி வணக்கம் அம்மா ;

காதோரம் கேட்டவற்றை - என்
கண் பார்த்த அதிசயத்தை
காலைப் பொழுதில் கவியாக்கி - உன்
கண் முன்னே வைக்கின்றேன் ;

ஓ ! பூமித்தாயே - உன்மடியில்
ஓடித் திரிந்து மகிழ்ந்த மக்கள்
ஓங்காரத்தை மறந்தனரோ
ஓடி வா ! நீயும் அவர் முன்னே
ஓரடி எடுத்து வாயசைத்து
ஒப்பில்லா பரமனை உணரச்செய்தாயே

தலையளியுடன் கடலுயிர்களைக் காத்து
தன்பால் இழுக்கும் கன்னியே - நின் மடியில்
தவழும் குழந்தைகளை - நீ
தாலாட்டி சீராட்ட மறந்தாயோ ?
தருணம் வரும் தாயே
தக்கபடி காப்பாய் தாயே ;

ஆதாரம் இல்லாமல் ஆடிப்பாடி
ஆகாயத்தில் அசைந்தாடும் வாயுதேவனே
ஆடித் திரியும் ஜீவன்களை - உன்
ஆவேசத் தாண்டவத்தால் அழிக்காதே - நீ
ஆணவத்தை அடக்கி அமைதியடைந்து
ஆசையாகக் காப்பாய் தேவனே ;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவர்களை தீயிட்டழிக்கும் அக்கினியே;
தீண்டுதல் கொடிதென்று எண்ணி - எட்டுத்
திசைகளிலும் வாழும் மக்களை - போன
திசை தெரியாமல் போக்கும் - தீயோனே
திருந்தி வாழ வரங் கொடுத்து
திருப்திப் படுத்தும் தேவனே;

வான மண்டலத்தின் அதிபதியான இந்திரனே;
வரவேற்றுப் பாடாமலே மாரிதவறி
வந்து அண்டத்தை அழிக்காதே !
வசந்தம் எம் வாழ்வில் மலரும் – அன்று
வந்து மும்மாரி பொழிந்து, காக்க
வணக்கம் செய்கிறேன் தாரணியிலே;

ஐந்தொழில்களையும் சிறப்பாகச் செய்து
ஐம்பூதங்களும் உலகைக் காக்க
ஐவகை நில மக்கள் ஒன்றினைந்து
ஐம்பெரும் காப்பியங்களைச் சிறப்பிக்க
ஐங்கரனை முதலில் துதித்து
ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுவோமாக;



நிறைவு

செல்வி. சுபத்திராதேவி நடராஜா
நல்லாயன் மகளிர் கல்லூரி
நுவரெலியா.

| |
|---|
| ஒரு கருத்து பழைய தாவும், இருக்கலாம்<br>முன்பு பலர் கூறிய தாகவும் இருக்கலாம்<br>ஆனால் அக்கருத்தை உயர்ந்த முறையில்<br>அழகாகக் கூறுபவனுக்கே அது உரியதாகும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை அறிவால் அறியவைக்கும் உபநிடதம்

ஆசிரியை - பரிசுத்தத் திரித்துவக் கல்லூரி
நுவ / இந்து கலாசாரப் பேரவையின்
அற நெறிப்பாடசாலை

திருமதி. நிர்மலா பத்மநாதன்
ஹாவா - எலிய

''நல்லவனை மிக நல்லவனாக்குவதும் கல்வி கெட்டவனை மிகக் கெட்டவனாக்குவதும் கல்வி'' இது ஒரு சீனப்பழமொழி. கண்டது கற்க பண்டிதனாவான். ஆனால் கண்டதை எல்லாம் கற்றுவிடலாகாது என்பது ஆன்றோர் வாக்கு வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு இலட்சியம் இருத்தல் வேண்டும். அந்த இலட்சியத்திற் கேற்ப கற்பதே முறை, ஏனைய கற்பதற்கு ஆயுள் போதாது.

''எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்கிறார் வள்ளுவர். நான் யார்? எங்கிருந்து வந்தேன் எங்கு போகிறேன் என்பவற்றை சிந்திக்கும் அறிவு பெற்றவர்களுக்கு மெய்பொருளை காண்பது இலகுவாகவே இருக்கும்.

''அருளாக எவையும் பாரென்றான் - அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்ட தல்லால் - கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி'' என்றல்லவா தாயுமானவர் களிப்பில் பாடுகிறார். இதுபோல எமது இந்து மத உபநிடதங்கள் கல்வியும் அறிவு கூர்மையும் கொண்டு இறைவனை நாடுதலையே குறியாகக் கொண்டுள்ளன என்று திடமாகக் கூறலாம். இதனாலேயே ''கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியான இறைவன் கல்லாதவர் நெஞ்சில் நில்லரன்'' என்றும் உண்மையினை எமது இந்து தர்மங்கள் எடுத்துக் காட்டுகின்றது.

உண்மை அறிவினாலேயே எமது அறியாமையை போக்கமுடியும் காமம், குரோதம், உலோபம் ஆகிய மூன்றையும் உடையது நரகவாழ்வு. ஆகையால் இம் மூன்றையும் துறத்தல் வேண்டும் என்று கண்ணனே கீதையில் கூறுகின்றார். இம்மூவித குற்றங்களிலிருந்தும் எம்மை தூய்மை செய்ய கல்வியே சிறந்த தூய்மை தரும் மருந்து என்கிறது கடோபநிடதம்

அறியாமை அறிவகற்றி அறிவிலுள்ளே
அறிவுதனை அருளினான் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் காரணங் களோடும்
கூடாதே வாடாதே —

என்று சிவஞான சித்தியார் கூறுகிறது. எனவே பரம்பொருளை தேடுவதற்கு பயன்படும் கல்வியால் ஈற்றில் ஏமாற்றமே மிஞ்சும் இதனையே தேனமுத திருவாசகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகிப் பெருகி உளங்குளிர முகந்து கொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் —

எனக் கூறுகிறது. உயிர்கள் அனைத்திலும் இருப்பவனை உயிர்களுக்கு உயிராய் ஆகின்றவனை உயிர்கள் அறிவதில்லை. உயிர்கள் அனைத்தையும் உள்ளிருந்து இயக்குபவன். அவனை அறிவாலே அறிதலே அறிவாகும் என்கிறது பிருகதாரணிய உபநிடதம்.

கண்களால் இறைவனை காணமுடியாது. வாக்கால் விளங்கமுடியாது. மற்ற இந்திரியங்களாலும் அவரை அடைய முடியாது. தபசும் கிரியைகளும் அவரைக்காண உதவமாட்டா. கல்வியறிவு, ஞானபிரகாசத்தால் மட்டுமே அவரை காணமுடியும் என்கிறது முண்டக உபநிடதம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய
கருவாய் மலராய் கனியாய் மணியாய் — என்கிறது

நாயன்மார் பாடிய தோத்திரங்கள் இப்படிப்பட்ட பரம் பொருளை அகக்கண்ணாகிய அறிவுக் கொண்டே அறிதல் முடியும் அறியவும் வேண்டும்.

"வித்தை விரும்பு'' என்றால் கல்வியில் ஆசைகொள் என்பதே கருத்தாகும். கல்வியில் நாட்டமுடையவர் அனைவரும் உண்மைப் பொருளில் உண்மையறிவால் நாட்டங் கொள்ள தயங்குகின்றனர்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்

கல்வியின் அழகு கல்விக்கே இலக்கணமாக அமைந்த பரம்பொருளை காணுதலேயாகும். சிற்றறிவு படைத்தவர் பேரறிவுடையவனாக வர எத்தனிக்கிறான். சிறு செல்வமுடையவன் பெருஞ்செல்வந்தனாக வர முயல்கிறான். அதுபோல் கல்வியில் முதல்படியில் இருக்கும் நாம் அவ்வறிவைக் கொண்டு நிலையான அறிவானவனை தேடுதலே சிறந்த அறிவாகும் சிறந்த கல்விக்கு அழகு நல்லொழுக்கம். கல்வியை வாழ்ந்து காட்டுதலே கற்றதின் பயனாகும். கற்றவழி வாழ்தலே கற்றவனாவான். அறிவுவழி சென்றவனாவான்.

பிரமத்தை அறியும் அறிவு அஞ்ஞானத்தை தகர்த்துப் பிறப்பெனும் பேதமை நீங்கும். அதற்கு இந்துமத உபநிடதங்கள் உண்டை இலட்சியத்தையுணர்த்துகிறது. சமயத்தின் உள்ளீட்டையும் பேருண்மையையும் இரகசியத்தையும் கடவுள், மனிதன் இரண்டையும் தொடர்பு படுத்தும் அறிவு என்பவற்றை விளக்கி ஆழ்ந்த சிந்தனையை தூண்டி விடுகின்றன. தனிப்பட்ட ஒரு சாராருக்குரிய சொத்தன்று உபநிடதங்கள். அவை நல்வாழ்வில் உண்மையறிவில் நாட்டமுடைய அத்தனை பேருக்கும் உரிய சொத்து. மூடநம்பிக்கைக்கு சாவுமணியடித்து சீரிய வேதாந்த கொள்கையைச் செவ்வனே புகட்டி வாழ்வாங்கு வாழ வழி விடுகின்றது.

அறிவை அறிவால் அறிவுபூர்வமாய்
அறிபவனே அறிவாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் வாழ்த்துகிறோம்

# அருணா ஜுவலரி

**இல. A 22, புதிய கடை வீதி,**

**நுவரெலியா.**

மற்றவர்கள் எதை உங்களுக்குச் செய்யக்கூடாது
என்று நீங்கள் எண்ணுகிறீர்களோ
அதை மற்றவர்களுக்குச் செய்வதை தவிருங்கள்.

— சத்திய சாயிபாபா

இழந்ததைப் பற்றி வருந்துவதில் பயனில்லை
வருவதை நினைத்து நிமிர்ந்து நில்

— சுவாமி விவேகானந்தர்

அடுத்தவர்களையே எல்லோரும் சீர்திருத்தப் பார்க்கிறார்கள்
தங்களையே மறந்து

— இரவீந்திரநாத்தாகூர்

இஷ்டம்போல் வாழ்கிறவர்கள்,
நிச்சயம் கெட்டுத்தான் போவார்கள்,
கஷ்டப்பட்டு வாழ்பவர்களே முன்னேறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிப் பேரிகைக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

பல்வலி கொண்டவனுக்கு
அவனைத்தவிர உலகில் மற்ற அனைவரும்
ஆனந்தமாக வாழ்வதாகவே தோன்றும்

- பெர்ணாட்ஷா

# கவிதாஸ்

**C 2, கவிதாஸ் கொம்ப்லக்ஸ்**

**லோசன் வீதி,**

**நுவரெலியா.**

தொலைபேசி : **2419 · 2923 · 2497**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவையின் ஓராண்டில்
# போட்டிகளும், பரிசு பெற்றோரும்
## மணிவாசகர் விழா கண்ட திருவாசகப் போட்டி

## 27-06-1990

1 மனனப் போட்டி கீழ்ப்பிரிவு

*1* P. *கமலதர்ஷனி, நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா*
*2 கலா, பரிசுத்தத் திருத்துவக்கல்லூரி, நுவரெலியா.*

2 மனனப்போட்டி - மேற்பிரிவு

*1 அமராவதி, பரிசுத்தத் திருத்துவக் கல்லூரி, நுவரெலியா.*
*2* V. *சாந்தினி, நல்லாயன் மகளிர் கல்லூரி நுவரெலியா.*

3 பேச்சுப்போட்டி - மேற்பிரிவு

*1* M. *கலாதேவி, பரிசுத்தத் திருத்துவக்கல்லூரி, நுவரெலியா*

## சொற்போரில் விற்பனர்கள்

**பாடசாலைகளுக்கான விவாதப் போட்டி - 1990**

முதலாவது சுற்றுவட்டம் 28-07-1990

**வாதத்திறமையின் அடிப்படையில் வெற்றி பெற்றோர்**

*நுவரெலியா புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலயம், நுவரெலியா*

*1* R. *மஞ்சுளா* *2* A. *கிஷோக்குமார்*
*3* O. *கௌரி - சிறந்த விவாதிப்பாளர்*

எதிர்தரப்பில் சிறந்த விவாதிப்பாளர்

P. *இந்திராணி, லபுக்கலை தமிழ் வித்தியாலயம் லபுக்கலை*

**06 - 08 - 1990**

வாதத்திறமை காட்டி வெற்றிபெறும் பாடசாலை

*நுவரெலியா நல்லாயன் கல்லூரி மாணவிகள்*

*1* M. *சுபத்திரா — சிறந்த விவாதிப்பாளர்*
*2* C. *யசோதா* *3* A. *கவிதா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்தரப்பில் சிறந்த விவாதிப்பாளர்

செல்வி T. தினமனி பரிசுத்த திருத்துவக் கல்லூரி, நுவரெலியா

வெற்றிபெற்றோர் - செல்வன் 1 S. K. சந்திரசேகரன் - சிறந்த விவாதிப்பாளர்

2 V. கருணாமூர்த்தி  3 G. இராஜேஸ் கண்ணா

எதிர்த்தரப்பில் சிறந்த விவாதிப்பாளர் - செல்வன். S. லோரன்ஸ்

வெற்றி பெற்றோர் - கந்தபளை மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த

1 செல்வன். S. சன்முகராஜா  2 S. மாதினி

3 A. யோகேஸ்வரன் - சிறந்த போட்டியாளர்

எதிர் தரப்பில் சிறந்த போட்டியாளர்

செல்வன் R. பாலகுரு, இராகலை தமிழ் மகா வித்தியாலயம் - ஹால்கரன்ஒயா.

## இரண்டாம் சுற்று வட்டம்

### 22 - 09 - 1990

வெற்றிபெற்றோர் - நுவரெலியா நல்லாயன் மகளிர் கல்லூரி

1 செல்வி. M சுபத்திரா  2 செல்வி. S. யசோதா - சிறந்த போட்டியாளர்

3 செல்வி. A. கவிதா

எதிர்தரப்பில் சிறந்த போட்டியாளர்

செல்வன். K. சந்திரசேகரன், புனித சவேரியார் கல்லூரி - நுவரெலியா.

வெற்றி பெற்றோர் - மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயம் - கந்தபளை

1 S. K. சன்முகராஜா - சிறந்த போட்டியாளர்

2 S. மாதினி  3 செல்வன். A யோகேஸ்வரன்

எதிர்தரப்பில் சிறந்த விவாதிப்பாளர்

செல்வி. O. கௌரி, புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலயம் நுவரெலியா

## இறுதிச் சுற்றுப் போட்டி

விவாதத்தில் திறமைகாட்டி வெற்றிபெற்ற பாடசாலை

நு / மெதடிஸ்ட் தமிழ் வித்தியாவயம்

1 செல்வன். S. K. சன்முகராஜா - சிறந்த விவாதிப்பாளர்

2 செல்வி. S. மாதினி  3 செல்வன். A. யோகேஸ்வரன்

எதிர்தரப்பில் சிறந்த விவாதிப்பாளர்

செல்வி. M. சுபத்திரா, நல்லாயன் மகளீர் கல்லூரி - நுவரெலியா.

பரிசில்களும் சான்றிதழ்களும் விழாவிலே கலந்துகொண்ட பிரதம அதிதி மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு. அண்ணாமலை அவர்களால் வழங்கப்பட்டது,

> கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவர் இனிக்
> கெஞ்சும் உத்தேச மில்லை — சொந்த
> வலி வுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
> வார்த்தைக்கு மோசமில்லை.
>
> ''பாரதிதாசன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா இந்துக் கலாசாரப் பேரவை
# பாடசாலை மட்டத்தில் ஆண்டு விழா
# சம்பந்தமாக நடாத்தப்பெற்ற போட்டிமுடிவுகள்

### மத்திய பிரிவு - ஆண்டு 07 - 09 வரை

1 கட்டுரை - 1 S. கிருபாஷினி, நல்லாயன் மகளீர் கல்லூரி - நுவரெலியா
2 M. தயாகாந்த், புனித சவேரியார் கல்லூரி - நுவரெலியா
8 R. பாரதி, லபுக்கலை தமிழ் வித்தியாலயம் - லபுக்கலை

### மேற்பிரிவு - ஆண்டு 10 - 11 வரை

1 கட்டுரை - 1 R. சதானந்தன், இறம்பொடை தமிழ் வித்தியாலயம் - இறம்பொடை
2 N. தயாலெனின். லபுக்கலை தமிழ் வித்தியாலயம் - லபுக்கலை
3 D தயானந்தன், டலோஸ் தமிழ் மகா வித்தியாலயம் உடபுசல்லாவ

**II பேச்சுப்போட்டி**

1 செல்வி கவிதா ஆறுமுகம், நல்லாயன் மகளீர் கல்லூரி
2 செல்வி R. சண்முகப்பிரியா, லபுக்கலை தமிழ் வித்தியாலயம் இல. 1
3 செல்வி, N. பிரமிளா, இராகலை தமிழ் மகா வித்தியாலயம்

### விசேட பிரிவு - ஆண்டு – 12 - 13 வரை

I கவிதை 1 R. குணராஜா, இராகலை தமிழ் மகா வித்தியாலயம் - இராகலை
2 S. விஜயபாரதி, இராகலை தமிழ் மகா வித்தியாலயம்-இராகலை
3 M. பாக்கியமலர், நல்லாயன் மகளீர் கல்லூரி - நுவரெலிமா

II சிறுகதை 1 நா. குணசீலன், புனித சவேரியார் கல்லூரி - நுவரெலியா
2 கா. ஜானகி, நல்லாயன் மகளீர் கல்லூரி - நுவரெலியா
3 P. கிருஸ்ணகுமாரி, இராகலை தமிழ் மகா வித்தியாலயம் இராகலை

---

### நுவரெலியா இந்துக் கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென நடாந்தப்பட்ட போட்டி முடிவுகள்

1 பா ஓதல் இரண்டாம் பிரிவு
1 P. சசிகுமார்
2 J சசிரூபினி
3 R. கோபிராஜ்

2 பா ஓதல் மூன்றாம் பிரிவு
1 S கற்பகம்
2 S சிவகலை
3 C. செல்வப்பிரியா

3 இந்து சமய பாடப் பரீட்சை
1 J. சசிருபினி
2 P. மைதிலி
3 N. பவாணி

4 இந்து சமயப்போட்டி மூன்றாம் பிரிவு
1 S. கற்பகம்
2 S. இரஜனீஸ்வரி
3 S. குகணேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை, உண்டானால் வெற்றியுண்டு

அ யோ னா ட்ரேடர்

( கிழங்கு வியாபாரிகள் )

இல. 2/B, சென் அன்றூஸ் ட்ரைவ்,

நு வ ரெ லி யா.

தொலைபேசி: 2923-2419

கடமைக்கு உயிர் உண்டு அது பிணமல்ல

ர ம் யா டெ க் ஸ்

இல. 50, புதுக் கடைவீதி,

நு வ ரெ லி யா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேரவையின் போட்டி நிகழ்ச்சிகளில் சமன் செய்து சீர்தூக்கி கோல்போல் அமைந்த நடுவர்கள்

திரு. பிரகாஷ்பதி பிராந்திய முகாமையாளர் இலங்கை வங்கி நுவரெலியா.

திருமதி. இராதாகிருஷ்ணன் அதிபர் வெஸ்ட்வர்ஹோ தமிழ் வித்தியாலயம்

திரு. மா கருணாநிதி அதிபர் பரிசுத்த திருத்துவக் கல்லூரி

திரு. இராசையா அதிபர் கந்தப்பளை மெதடிஸ் வித்தியாலயம்

திரு. சுந்தரலிங்கம் ஆசிரியர் புனித சவேரியர் கல்லூரி

திரு. சுகுமாரன் ,, ,, ,, ,,

திரு சுப்பிரமணியம் ,, ,, ,, ,,

திருமதி R. சிவபாலன் ,, ,, ,, ,,

செல்வி, M. E. ரெங்கநாதன் ஆசிரியை நல்லிளைப்பாற்றி கன்னியர் பாடசாலை

செல்வி. R. தமயந்தி ,, ,, ,, ,,

திருமதி. R. முருகேசன் ,, நல்லாயன் மகளிர் கல்லூரி

செல்வி S. சிவன்ஜோதி ,, ,, ,, ,,

செல்வி. தவநிதி ,, ,, ,, ,,

செல்வி. சுபத்திரா ,, ,, ,, ,,

திருமதி. N. பந்மநாதன் ,, பரிசுத்த திரித்துவக் கல்லூரி

திரு K. இராஜலிங்சும் ஆசிரியர் இராகலை தமிழ் மகா வித்தியாலயம்

திரு I. வசந்தகுமார் கந்தப்பளை மெதடிஸ் த. வி.

திரு. K. இராஜேந்திரன் இரம்பொடை நகர்

திரு. M. பரந்தாமன் உதவி முகாமையாளர், கார்கில்ஸ், நுவரெலியா.

திரு. பேரின்பநாதன் ஆசிரியர் விடுதி, பரிசுத்த திருத்துவக் கல்லூரி

திரு. திருச்செல்வம் அதிபர், வேவண்டன் தமிழ் வித்தியாலயம்

செல்வி. நிர்மலா முத்தழகு, ஆசிரியை பரிசுத்த திருத்துவக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாழ்த்துக்கள்

அடக்கம் உடையவர்களையே
உலகம் என்றும் மதிக்கும்

# அனுஜா டிரேடர்ஸ்

( மரக்கரி. கிழங்கு வியாபாரிகள் )

இல 29, சென் அன்றூஸ் ட்ரைவ்

நுவரெலியா.

☎ 052-2806

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் கலைஞர்களுடன் ஒரு நாள்

இலைமறை காயாக மறைந்திருக்கும் இளம் எழுத்தாளர்களும், எழுத்தாற்றல். கலையாற்றல் மிக்க இன்றைய இளம் தலைமுறையினரும், எழுதத் துடிக்கும் இலக்கிய நெஞ்சங்களது மனதுக்குள் மழுங்கிக் கிடக்கும் பரந்த எண்ணங்களைக் கட்டியெழுப்பி விழிப்பூட்டி ஊக்கமளிக்கும் முகமாக மலையகத்துக்குள்ளேயே தனியான சாஹித்திய விழாக்கள் நடைபெறுவது மிகச் சிறப்பாகும்.

இதனடிப்படையிலேயே கடந்த பங்குனி மாதம் 17ந் திகதி எமது பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டு இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் கௌரவ அமைச்சர் திரு. P.P. தேவராஜ் அவர்களின் பிரசன்னத்தில் நடைபெற்ற மேற்படி கலை கலாசார முன்னோடிகளின் ஒன்றுகூடல் வைபவம் மிக ஆக்கபூர்வமானதாக இருந்ததென்றால் மிகையன்று.

இத்தகைய ஒன்றுகூடல்களில் தெளிவு பெற்ற பின்னர் இளம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், நம் சமூக நல ஆர்வலர்கள், கலைஞர்கள் போன்றோரின் புகழ் வாய்ந்த சிந்தனை வெளிப்பாட்டினை நினைவுக்குக் கொண்டு வருவதற்கும், கலையுணர்வை ஊக்குவிப்பதற்கும் அத்தகையோரை அறிமுகமாக்கிக் கொள்வதற்கும் வழிவகுக்க இந்து கலாசார அமைச்சுடன் எமது பேரவையும் கைகோர்த்து நிற்கிறது.

இவ்வாறு மலையக மக்களிடையே காணப்படும் பல ரசனையூட்டும் விடயங்களை இலக்கிய படைப்புக்களாக, கவிதைகளாக, நாடகங்களாக பத்திரிகை வாயிலாகவோ அல்லது புத்தகங்கள் வாயிலாகவோ பிரசுரம் செய்வதற்கு ஏற்ற அனைத்து ஒத்துழைப்பையும் உதவியையும் அளிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் எமது பேரவையினூடாக இந்து கலாசார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

மேலும் இந்த இலக்கிய வளர்ச்சி மாவட்டரீதியிலும் மாகாண ரீதியிலும் எவ்வாறு விரிவடைதல்பற்றி மாவட்டத்திலுள்ள இலக்கிய வட்டங்களுடன் தொடர்புகொண்டு கலந்துரையாடுதல் மூலமும் நம் சமூகத்தாரிடையே நிலவும் சமூக குறைபாட்டினை நீக்கி சீர்த்திருத்தங்களை புகுத்தி மக்கள் இலகுவாக கற்றறிவடையக்கூடிய விதத்தில் வாசிகசாலைகளை ஆங்காங்கே நிறுவி அவற்றை மக்கள் முறையாக பயன்படுத்தக்கூடிய வகையில் சரியான முறையில் நிருவகித்தல் மூலமும் ஓர் கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்த எமது பேரவை இந்து கலாசார அமைச்சுடன் சேர்ந்து பங்கேற்ற விழைகிறது என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று.........

எம்முயற்சிகள் மிகச்சிறிதே; இருப்பினும் துளிர்க்கக்கூடிய தளிர்களின்
மீது இறை நோக்கில் பெரும் நோக்காய் .நோக்குவோர்
எம்மை சிற்றளவிலாவது வாழ்த்தட்டும் அன்றேல் தூற்றட்டும்

பேரவை எழும்பிட பேராற்றல் கொண்டு
போரவை ஆக்காமல் போற்றி வழிகாட்டிட
நாவலர்களாக நல்லெண்ணம் மேலோங்கி
காவலர் ஆகாஎம்மை காத்து வழிகாட்டினோர்க்கும்

நல்லதொரு அமைச்சராய் நற் கீர்த்திகொண்டு
இல்லாதொரு பேரவையை இங்கமைக்கச் செய்த
வல்லவர் அமைச்சருக்கு வாயாரக் கூறுகின்றோம்
நல்லவரே நன்றி நன்றி என்று

கல்விக்கூடங்களின் கனிவான அதிபர்
செல்விகளாய் ''திரு''க்களாய் சேர்ந்துவந்த ஆசிரியர்
பவ்வியமாய் பங்கேற்று பல திறமைக் காட்டிட்ட
நன்மாணாக்கர் யாவருக்கும் நவில்கின்றோம் நன்றி

ஆல் கொண்ட விழுதாய் அழகாய்ப்பரிணமிக்கும்
ஆவெலியா முத்து மாரியம்மன் ஆலய
ஆட்சிச் சபைக்கும் அதன் குழுவினர்க்கும்
ஆயிரமாய் நன்றிதனை அள்ளித்தெளித்தோமே

எம் செல்வம் எப்போதும் ஏற்றம் சீர்செய்யும்
நம்மக்கள் தொண்டிற்கு நன்றாக வழங்கிடுவோம்
இம்மலர் சிறப்புற எதனையும் தந்திடுவோம்
என்றியைந்த வர்த்தகரே இணையிலா நன்றி ஐயா

ஆக்கம் பல தந்து அறிவு சீர்செய்து
தேக்கம் இலா இம்மலரை தெளிந்தநீ ரோடையாக்கிய
மா மக்கள் யாவருக்கும் மனதாழம் நின்று
பாக்களாய் கூறிடும் பணிவான நன்றியிது

ஈற்றில்

எல்லோருக்கும் நன்றிக்கடன்
எப்படி செப்பவென்று பிள்ளை மழலையாய்
பெயர் தேடி நிற்கின்றோம்
பாராமுகமாய் தவறேதும் விளைந்திருப்பின்
போர் ஏதும் இன்றி ஏத்திடுவீர்
பெருமனதுடனே நன்றிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best Compliments*

*from*

# MAHAWELI TRADERS

Importers & General Merchants

## LANKA POLYTHENE INDUSTRY

Manufacturers of LD PE - HD - PE

P. P. FILMS PLAIN & PRINTED BAGS

**32, A. K. Cyril Perera Mawatha,**

**COLOMBO - 13.**

T. Phone : 540325
540327


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு: செனித் அச்சகம் 192, கொட்டுகொடல்ல வீதி - கண்டி